Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

கங்கள்: பதினான்கு

வு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 17 வெள்ளிக்கிழமை (01.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 194

ராம்கோ
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# போராளிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த

# அரசிற்கு புலிகள் இரண்டு வாரகால அவகாசம்

## வறின் சுய பாதுகாப்பு ஏற்படுத்தப்படுமென எச்சரிக்கை

(நமது நிருபர்)

மிழீழ விடுதலைப் புலிப் போராளிகளின் பய தின்போது இனியும் உயிராபத்து ஏற்படாது இரண்டு வாரகாலத்திற்குள் அரசு உத்தர தம் அளிக்க வேண்டும்.

டைத்தரப்போ, அரசாங்கமோ யுத்தநிறுத்த ன்படிக்கையின்படி போராளிகளுக்கான பயண ழங்குகளை மேற்கொள்ளத்தவறினால், எமது ாக்குவரத்துக்களை முடக்குமானால், யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் எமது போக்கு வரத்துக்களை எவ்வாறு முன்னெடுத்தோமோ அந்த வழியில் இறங்குவதைத் தவிர வேறு வழியில்லை.

இதனால் இராணுவத்தினுடைய போக்குவரத் துக்களையும் முடக்கவேண்டிய நிலை உருவாகு மென தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## மாவடி வேம்பில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி மாவடிவேம்பில் நேற்றுமுன் தினமிரவு இளம் குடும்பஸ்தர் ஒரு வர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்ட நடராஜா பரமேஸ்வரன் (வயது 29)என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரது சடலத்தை நேற்றுக்காலை ஏறாவூர் பொலிஸார் வீதியில் கண் டெடுத்துள்ளனர்.

நேற்று (14 ஆம் பக்கம் பார்க்க)

## னாமி நிவாரணம் குறித்து ஆராய ஆலோசனைச் சபை நியமனம்

(கொழும்பு)

சுனாமி நிவாரண சபை நடவ க்கைகள் குறித்து ஆராய்வதற்கு னாதிபதி ஆலோசனை சபை றை நியமித்துள்ளார்.

இவ் ஆலோசனைச்சபை அர ம் விடுதலைப்புலிகளுக்கு யில் கைச்சாத்திடப்பட்ட துக்கட்டமைப்பின் செயற்திட் டங்கள் அதன் நடவடிக்கைகள் மற்றும் நிவாரண உதவிகள் பாதிக் கப்பட்ட மக்களை உரிய முறை யில் சென்றடைகின்றதா என்பது தொடர்பாகவும் ஆராயும் இந்த ஆலோசனை சபையில் மைத்திரி பாலசிறிசேன உட்பட மூன்று அமைச்சர்களும் இடம் பெறுகின் றனர்.

(ச-8)

## இராணுவ புலனாய்வுத்துறையினர் மூவர் மட்டக்களப்பில் நேற்று சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பாலமீன் மடு விற்கும் ஊரணிக்கும் இடையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற துப் பாக்கிப்பிரயோகத்தில் இராணுவப புலனாய்வுத்துறையைச் சேர்ந்த இருவர் உட்பட மூன்று படையினர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பற்பொடிக் கம் பனியில் இயங்கும் இராணுவப்புல னாய்வு பிரிவு முகாமில் இருந்து ஊரணி படைமுகாமிற்கு ஆட்டோ ஒன்றில் சென்றுகொண்டிருந்த போதே இவர்கள் இனந்தெரியாத் வர்களினால் சுட்டுக்கொல்லப்பட் டுள்ளனர்.

பெனிசல்ஸ் தோட்டத்திற்கு அருகில்வைத்து மோட்டார் சைக் கிளில் எதிர்கொண்ட இனந்தெரி யாத நபர்கள் அவர்களை வழி மறித்து துப்பாக்கிப்பிரயோகத்தை செய்துவிட்டு தப்பிச்சென்றுள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## உடன்படிக்கைக்கு எதிராக

## யர் நீதிமன்றில் வழக்குத்தொடர

## தப்புற்றுள்ள இயக்கம் தீர்மானம்

## கட்டமைப்பிற்கு எதிரான மனுக்கள் நேற்று நீதிமன்றத்தால் ஆராய்வு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பிற்கு எதி ராக நீதிமன்றத்தின் தாக்கல் செய் யப்பட்ட மூன்று மனுக்கள் நேற்று

குணவன்ஸதேரர் தேசியபிக்குமார் முன்னணியின் தம்பர அமிலதேரர் ஜே.வி.பியின் மேல்மாகாண உறுப் பினர் ஜே.பி.ஜனேந்திரவாஸ் குண வர்த்தன ஆகியோர் தாக்கல்

# தேசப்பற்றுள்ள இயக்கம் தீர்மானம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு ...விக்கும் எவரும் அடுத்த ...திபதித் தேர்தலில் ஜனாதி ...பாக வெற்றிபெற முடியாது. ...கு மக்கள் இடமளிக்க மாட் ...ள் என்று தேசப்பற்றுள்ள ...கத்தின் தலைவர் எல்லே ...வன்ஸ தேரர் தெரிவித்துள்

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,2002இல் புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஊடாகவும் 2005இல் ஆழிப்பேரலை நிவாரண சபை உடன்படிக்கை ஊடாகவும் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட தலைவர்கள் 2006இல் நாட்டைப்பொறுப்பேற்க முடியாத வகையில் நாம் மக்களுடன் இணைந்து போராட்டங்களை முன்னெடுபபோம்.

இந்த உடன்படிக்கைக்கு எதிராக நாம் உயர் நீதிமன்றம் செல்ல பிரபல வழக்கறிஞர்களை நாடியுள்ளோம்.

மகாநாயக்கர்களுக்கு இவ் உடன்படிக்கைகளை கையளித்து அது சம்பந்தமாக அவர்களுடன்

(14 ஆம் பக்கம் பார்க்க)

பொதுக்கட்டமைபபிறகு எதிராக நீதிமன்றத்தின் தாக்கல் செய்யப்பட்ட மூன்று மனுக்கள் நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் ஆராயப்பட்டன.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக தாக்கல் செய்த தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தலைவர் எல்லே ... முன்னணியின் தமபர அமைச்சர் ... ஜே.வி.பியின் மேல்மாகாண உறுப்பினர் ஜே.பி.ஜனேந்திரவாஸ் குணவர்த்தன ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களே நேற்று ஆராயப்பட்டன.

இவ்வொப்பந்தத்தின்படி சட்டரீதியான (14 ஆம் பக்கம் பார்க்க)

# ...லிகளின் வவுணதீவு காவலரண் மீது ...ள்ளிரவில் துப்பாக்கிப்பிரயோகம்

(கிளிநொச்சி)

...னதீவில் உள்ள விடுதலை ...ன் முன்னணிக்காவலரண் ...நற்று முன்தினமிரவு 9.45 ...ளவில் இனந்தெரியாதோரால் ...தல் நடத்தப்பட்டுள்ளது. ...ராணுவ முன்னணிக்காவலரணில் இருந்து வந்தவர்களே தாக்குதல் நடத்தியதாக விடுதலைப்புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர். துப்பாக்கித்தாக்குதல் நடத்தியவர்கள் மீது விடுதலைப்புலிகள் திருப்பித் தாக்கியதில் அவர்கள் தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.(ச)

# சமாதானப்பேச்சுக்கு இந்தியா உதவுமாம்

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட சுனாமி பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்தி செயற்படுத்துவதன் மூலம் ஜனநாயக நெறிமுறைகளை பலப்படுத்த முடியுமென இந்திய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசுக்கும் (14 ஆம் பக்கம் பார்கக)

# சிறுபான்மை பிரதிநிதித்துவம் மக்கள் விடுதலை முன்னணிக்கு!

அரசியல் அமைப்புச் சபையில் சிறுபான்மைக்கட்சியை பிரதிநிதித்துவம் செய்வதற்கான வாய்ப்பு ஜே.வி.பிக்கு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விலகி எதிர்க் கட்சி வரிசையில் அமர்ந்தமையினாலேயே ஜே.வி.பிக்கு இந்த வாய்ப்பு கிட்டியுள்ளது.

அரசியலமைப்புச் சபையில் அங்கம் வகிக்க தமது கட்சிக்கும் வாய்பளிக்குமாறு ஜே.வி.பி அரசியலமைப்பில் வேண்டுகோள் விடுக்க நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

இதுவரை காலமும் சிறுபான்மை கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் வாய்ப்பு 22 அங்கத்தவர்களைக் கொண்ட தமிழ்தேசியக் கூட்டமைப்பிற்கே கிடைந்திருந்தது. தற்போது 39 பாராளுமன்ற உறுப்பினர்களுடன இரண்டாவது இடத்தில் இருப்பதனால் அந்த வாய்ப்பை பெற்றுக்கொள்ள ஜே.வி.பி. நடவடிக்கை எடுத்து வருகிறது. (ச-4)


EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 0777-2349999,

011-2372952/3, 011-2360290/1

e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.




எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

## 1 ஆம் பக்கத் தொடர்ச்சி.....



போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ருப் ஹொக்லன்டை நேற்றுச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கைக்கான நோர்வேயின் பதில் தூதுவர் மற்றும் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ருப் ஹொக்லன்ட் ஆகியோர் நேற்று (30.06.2005) கிளிநொச்சியில் சந்தித்து கலந்துரையாடினர்.

முற்பகல் 10.00 மணியளவில் உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சி வந்தடைந்த நோர்வே குழுவினர் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் சந்திப்பில் பங்குகொண்டனர்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்களுடன் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் நிறைவில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய நேர்காணல் வருமாறு,

**கேள்வி:-இன்றைய சந்திப்பு தொடர்பாக?**

பதில்:-இன்று முக்கியமான சந்திப்பு இடம்பெற்றது. போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவரையும், அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வேயின் சிறிலங்காவிற்கான பதில் தூதரையும் சந்தித்தோம். இச்சந்திப்பில் முக்கிய விடயமாக அண்மையில் போராளிகள், பொறுப்பாளர்கள் பயண ஒழுங்கென்று கூறி உத்தரவாதம் அளித்து எமது போராளிகளை சதிவலைக்குள் சிக்கவைத்து கொல்வதற்கு எடுத்த முயற்சி சம்பந்தமாகத்தான் இன்றைய சந்திப்பில் எமது தலைமைப் பீடத்தின் இறுக்கமான நிலைப்பாட்டையும் அதிருப்தியையும் தெரிவித்திருக்கிறோம். ஆகவே இவ்வாறான தாக்குதல் நடவடிக்கைகள் தொடருமாகவிருந்தால் தொடர்ந்து இந்த போர்நிறுத்த சூழலை தக்கவைப்பதோ யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு ஏற்ப நாம் நடந்துகொள்வதோ சாத்தியமில்லாத ஒன்றாகமாறும். இன்றைய சந்திப்பிலே மிகமுக்கியமான எமது தலைமைப் பீடம் எடுத்திருக்கின்ற இறுக்கமான உறுதியான நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கிறோம். ஏனெனில் அண்மையில் எமது போராளிகள், பொறுப்பாளர்கள் பயணம் செய்கின்றபோது இடையிலே இராணுவ புலனாய்வு அமைப்பு, அவர்களின் துணையோடு இயங்கும் ஆயுதக் குழுக்களும் இணைந்து எமது போராளிகள், பொறுப்பாளர்கள் மீது கொலைவெறித் தாக்குதல்களை செய்ப் போகின்றார்கள் என்பது ஏற்கனவே எமது புலனாய்வு அமைப்பு மூலம் கிடைத்த தகவல். அந்த தகவலை கண்காணிப்புக்குழுவினரிடம் தெரிவித்ததன் அடிப்படையில் இப்படியொரு தாக்குதல் இடம்பெறவுள்ளது என்பன அடிப்படையில் எமது போக்குவரத்துக்கள் இடைநிறுத்தப்பட்டு, பாதுகாப்பு சரியாக உறுதிப்படுத்தப்பட்டு அந்த வகையில் கண்காணிப்புக்குழு படைத்தரப்பினதும் அரசினதும் முழு உத்தரவாதத்துடன் எங்கள் போராளிகளின் பயணம் இடம்பெற்றது.

இருந்தும் பலதடவை் சுட்டிக்காட்டப்பட்டும், எச்சரிக்கப்பட்ட நிலையிலும் எமது போராளிகள் பயணம் செய்த போது இடையிலே தாக்கப்பட்டுள்ளாகள். அத்தாக்குதல் நெருக்கடி நிலைகளை உருவாக்கும் தாக்குதலாக அமைந்துள்ளது. அந்த வகையில் எமது நிலைமைகளை விளக்கியிருக்கிறோம். இரண்டு கிழமைக்குள் யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி எமது போராளிகள் எமது தாயகப் பிரதேசத்தில் எந்தவித ஆபத்துக்களும் இன்றி சுதந்திரமாக நடமாடக்கூடிய நிலை இருக்கின்றது. அதை உத்தரவாதப்படுத்தவேண்டியது படைத்தரப்பாகும். ஆகவே அந்த வகையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்ட இரண்டு தரப்பு என்ற வகையில் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் படைத்தரப்பும் அரசும், போராளிகளின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யவேண்டும். எமது போராளிகள் போக்குவரத்து செய்கின்றபோது கண்காணிப்புக்குழுவும் இராணுவமும் அதில் பிரசன்னமாக இருக்கவேண்டும். எந்தவித உயிராபத்துக்களும் ஏற்படாத உத்தரவாதம் எமக்கு தரவேண்டும். மாதாந்தம் இரு பயண ஒழுங்குகளை செய்து தருமாறு கேட்டுக்கொண்டுள்ளோம்.

எமது போராளிகள், பொறுப்பாளர்கள் போக்குவரத்து செய்து எமது தகவல்களையும், பரிமாற்றங்களையும் செய்துகொள்ளாவிட்டால் நாம் யுத்தநிறுத்த உடன்படிக்கையை பேணுவது கஷ்டமாக இருக்கும். படைத்தரப்போ அரசாங்கமோ இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி ஒழுங்குபடுத்தத் தவறினால் பயண ஒழுங்குகளை செய்யத்தவறினால் எமது போக்குவரத்துக்களை முடக்குமானால் எமது போராளிகளோ, பொறுப்பாளர்களோ வழமைபோல யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் எமது போக்குவரத்துக்களை எப்படி முன்னெடுத்தோமோ அந்த நடைமுறைக்குள் இறங்குவதை தவிர வேறு வழியில்லை. ஆகவே இலங்கையரசும் படைத்தரப்பும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை பேணவேண்டும். அமைதிவழியில் பிரச்சினை தீர்வுகாணவேண்டும் என்ற அர்ப்பணிப்பு இருக்குமானால் யுத்தநிறுத்த உடன்பாட்டில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும். இதில் இழுத்தடிப்புக்களை செய்து நிலைமைகளை மோசமடைய செய்வார்களானால் தொடர்ந்து பொறுமை கீாத்துக்கொண்டிருக்கமுடியாது. இரண்டுவார காலந்தான் நாம் கால அவ்காசம் கொடுத்து இருக்கிறோம். எமது போராளிகளுக்கான பாதுகாப்பான பயண ஒழுங்குகளுக்கு அதற்கான சிபார்சுகளை செய்திருக்கிறோம்.

**கேள்வி:- போராளிகள் பயண ஒழுங்கு மட்டுமா? அல்லது யுத்த நிறுத்த உடன்பாட்டை பேணுவதற்காகவா கால அவகாசம் விடுத்துள்ளீர்கள்?**

பதில்:- போராளிகளின் பயண ஒழுங்குதான் முக்கியமாக பேசப்பட்டது. போராளிகள் கொல்லப்படுகின்றபோது உடன்படிக்கை நடைமுறைப்படுத்துவது சாத்தியம் அற்ற விடயமாக உள்ளது. எங்களுடைய போராளிகளின் பயணம் முடக்கப்படுகின்றபோது இராணுவத்தினுடைய போக்குவரத்தையும் முடக்கும் வழிவகையை கையாள் நாம் நிர்பந்திக்கப்படுவோம் யுத்தநிறுத்த உடன்படிக்கை சீர்குலைவுக்கு உட்படும். அதேபோன்று யுத்த நிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்ட நடைமுறைகள் சம்பந்தமாக இறுக்கமாக வலியுறுத்தியுள்ளோம். அதேபோன்று யுத்தநிறுத்த உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இயல்பு நிலையைக் கொண்டுவருவதற்கு உரிய நடைமுறைகள் சம்பந்தமாகவும் வலியுறுத்தியுள்ளோம். இதற்கு அரசும் படைத்தரப்பும் தீர்க்கமான முடிவு எடுக்க முயலவேண்டும். மக்கள் கொந்தளிப்பான நிலைக்குள் தள்ளப்பட்டு உள்ளார்கள். ஆர்பாட்டங்கள், ஊர்வலங்கள், வெகுஜனப் போராட்டங்கள் மூலம் தீர்வைத்தேடி முயற்சி செய்த வண்ணம் உள்ளனர். இந்த நிலையையும் இன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

**கேள்வி:- பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டதன் மூலம் தற்போது அரசு, புலிகளை ஏற்றிருப்பதாக அமைச்சர் ஒருவர் கூறியிருப்பது தொடர்பாக?**

பதில்:- அவர்கள் சொல்வதில் உண்மையிருக்கின்றது. இலங்கை அரசாங்கம் இன்று இருக்கின்ற அரசாங்கம் என்பதை நாம் நிராகரிக்க முடியாது. ஆனால் இரண்டு தேசங்கள் உள்ளன. ஆகவே தமிழர்களுடைய தேசம், தமிழர்களுடைய பிரதிநிதிகள் யார் என்பதை அரசு ஏற்றால் சரி. இரண்டு தேசங்களில் உள்ள அதிகார மையங்களை ஏற்றுக்கொண்டதினால்தான் பொதுக்கட்டமைப்பை ஏற்றுக்கொண்டுள்ளோம். ஆகவே இரண்டு அதிகார மையங்கள் இருக்கு என்பதை நாம் ஏற்றுக்கொண்டால் அவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நினைக்கின்றேன். இதில் தவறு இல்லை என்றுதான் நான் நினைக்கின்றேன்.

## பொதுக் கட்டமைப்பு நடைமுறை

**கேள்வி:- பொதுக்கட்டமைப்பு தொடர்பான வேலைத் திட்டங்கள் எப்போது ஆரம்பமாகும்?**

பதில்:- அது பற்றியும் இன்று சுட்டிக்காட்டினோம் முக்கியமாக கண்காணிப்புக்குழுத் தலைவர் அவர்களையும், நோர்வே அனுசரணையாளர்களையும் அழைத்ததன் நோக்கம் இன்றுள்ள பாராதூரமான நிலைமைகளை விளக்குவதற்காகத்தான். ஆகவே இன்றுள்ள நிலைமைகள் சீர்செய்யப்படாவிட்டால் எல்லாமே சீர்குலையும் என்பதுதான் இன்றுள்ள யதார்த்த நிலைமை. அதை இன்று நாம் வெளிப்படுத்தியதோடு பொதுக்கட்டமைப்பு நடைமுறைக்கு விரைவாக கொண்டுவரவேண்டும். ஒளபம் இடுவதோ இணக்கப்பாட்டை தெரியப்படுத்துவதோ முக்கியமில்லை. இதை மக்கள் ஒருபோதும் நம்பப் போவதில்லை. மிகவிரைவில் பொதுக்கட்டமைப்பு வேலைகளை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கான சூழலை அரசு விரைந்து உருவாககவேண்டும் என்பதை சுட்டிக் காட்டியுள்ளோம்.

**கேள்வி:- பொதுக்கட்டமைப்பு அங்கத்தவர் பெ[illegible] விபரம் தெரியப்படுத்தியுள்ளீர்களா?**

பதில்:- விரைவில் கையளிக்கவுள்ளோம் இரண்டு அல்லது ஒரிரு தினங்களில் எமது தாயகத்தின் மீள்கட்டுமானத்திற்கான நிதியத்தை, நிதியத்தின் காப்பாளரா[illegible] செயற்படபோகின்ற உலக வங்கியோடு பேசவிருக்கிறோம் அப்பேச்சு முடிந்தபின் எமது நிலைப்பாட்டை அனுசரணையாளர்களுக்கு தெரிவிக்கவுள்ளோம்.

## மோசமான களநிலைமைகள்

**கேள்வி:- பொதுக்கட்டமைப்பு தொடர்பாக முஸ்லிம் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தும் திட்டம் உள்ளதா?**

பதில்:- தற்போது உள்ள நிலைமைகளில் யுத்த நிறுத்த உடன்படிக்கையே நெருக்கடிநிலை அடைந்து செல்கிறது. கள நிலைமைகள் மோசம் அடைந்து செல்கின்றன. அரசும் படைகளும் நெருக்கடி நிலைமைகளை உருவாக்கியிருக்கின்றனர். அவற்றுக்கு தீர்வுகாண வேண்டும். நிலைமைகள் சீரடைகின்றபோது முஸ்லிம் சமூகத்துடன் நாம் பேசுவோம். எமது தாயகப் பிரதேசத்தில் என்ன வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் முஸ்லிம் சமூகத்தை இணைத்து கொள்வதும் யதார்த்தம். காலவோட்டத்தில் வேலை திட்டங்களை முன்னெடுக்கப்படுகின்றபோது முஸ்லிம் மக்களுக்கு அவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக்கூடிய முயற்சிகளை செய்வோம்.

**கேள்வி:- ஜே.வி.பி. இராணுவத்தினரை தம்முடன் இணைந்து பணியாற்ற அழைப்பு விடுத்திருப்பது தொடர்பாக?**

பதில்:- அது தொடர்பாக தாங்கள் ஜே.வி.பியைதான் கேட்கவேண்டும். இராணுவம் என்ன முடிவு எடுக்குமோ அதில் இலங்கையில் ஏற்படப்போகின்ற அரசியல் ஏனைய மாற்றங்கள் என்பன தங்கியுள்ளன. அவ் நிலைமைப்பாடு சம்பந்தமாக ஜே.வி.பியை கேட்பதுதான் பொருத்தமாக இருக்கும் என நினைக்கின்றேன்.

**கேள்வி:- இரண்டு வார கால அவகாசம் என்பது இன்றிலிருந்தா?**

பதில்:- இன்றிலிருந்து இரண்டுவார கால அவகாசம் கொடுத்து இருக்கின்றோம். இரண்டு வார கால அவகாசத்துக்குள் முடிவை தெரிவிக்கவேண்டும். அரசு யுத்த நிறுத்த உடன்பாட்டை பேணுவதற்கு தயாராக இருக்கிறதா? இல்லாவிடின் யுத்தநிறுத்த உடன்பாட்டை பேண விரும்பமில்லை - ஏற்றுக்கொள்ளவில்லை என்ற நிலைப்பாடு எடுக்குமானல், அதாவது நாம் புதிய கோரிக்கையை முன்வைக்கவில்லை யுத்த நிறுத்த உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையையும் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக பேணப்பட்டு வந்த நடைமுறைகளையும் செய்யுமாறுதான் கேட்டுக்கொள்கிறோம்.

**கேள்வி:- வாய்மூலமாகவா? எழுத்து மூலமாகவா கேட்டு இருக்கின்றீர்கள்?**

பதில்:- வாய்மூலமாகவும் எழுத்து முலமாகவும் கேட்டு இருக்கிறோம். ஆகவே இது சம்பந்தமாக இரண்டு வார காலத்துக்குள் பதில் தரவேண்டும் இல்லாவிட்டால் நாம் வழமைபோன்று போக்குவரத்து ஒழுங்குகளை செய்யவேண்டும். பயணம் செய்கின்றபோது படைத்தரப்பு இடைமறித்து நெருக்கடிகளை கொடுக்குமாக இருந்தால் இராணுவத்தினரின் போக்குவரத்துக்களை முடக்கும் நிர்பந்தத்திற்கு நாம் தள்ளப்படுவோம். இந்த நிலைமையை சுட்டிக்காட்டியுள்ளோம். இரண்டுவார காலத்துக்குள் இதற்கான முடிவை தருமாறு கூறியுள்ளோம். அரசும் படைத்தரப்பும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை பேணுவதா? இல்லையா என்பதை அவர்கள்தான் முடிவு செய்யவேண்டும்.

**கேள்வி:- யுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டு[illegible] இரண்டுவார காலம்தான் தற்போதும் கொடுக்கப்பட்டுள்ளதா?**

பதில்: அப்படியும் நினைக்கலாம். எங்களைப் பொறுத்[illegible] வரையில் இரண்டு வாரகாலத்துக்குள் அதற்கான முடி[illegible] கேட்டு இருக்கிறோம். இல்லாவிடின் எமது இறுக்[illegible] நிலைப்பாட்டை இரண்டுவார காலத்துக்குள் தெ[illegible] போம். நடைமுறைகளை நாம் விளக்கி கூறியுள்[illegible] எமது போராளிகள் முடங்கியிருக்கமுடியாது. [illegible] போராளிகள் சுதந்திரமாக நடமாடவேண்டும். முக்கிய[illegible] எமது தளபதிகள், பொறுப்பாளர்கள் எமது தலை[illegible] பீடத்துடன் அடிக்கடி கலந்துரையாடவேண்டும், ஒழு[illegible] படுத்தல்களை செய்யவேண்டும். அல்லாவிடின் யுத்[illegible] நிறுத்த உடன்படிக்கையில் உள்ள விடயங்களை [illegible] வது கஷ்டமாக எமக்கு இருக்கும் நாம் சுயம[illegible] பயணத்தை மேற்கொள்வது தவிர்க்கமுடியாது [illegible] இச் சந்திப்பில் விளக்கியுள்ளோமென அவர் [illegible]

# சிந்தையை அடக்கினால் சிங்கத்தின் மேல் சவாரி செய்யலாம்

"... பழவினைகள் பாறும்வண்ணஞ் சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட அத்தன்-" என்று அச்சோப் பதிகத்தில் ஆளுடைய அடிகளார் அரனை அருச்சிப்பார். "சித்தம் என்னும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த வித்தகனார் விளையாடல் விளங்கு தில்லை கண்டேனே'' என்று கண்ட பதீதுப் பதிகத்தில் காட்டுவார்.

சித்தம் அந்தக்கரணங்கள் நான்கில் ஒன்று. சுந்தரமூர்த்தி நாயனார் சிதம்பர தரிசனத்தை, "... அளப்பருங் கரணங்க ணான்குஞ் சிந்தையேயாக-" யோக நெறி சார்ந்த நிலையில் வழிபட்டமையைப் பெரியபுராணத்தில் சேக்கிழார் சிந்திக்க வைப்பார். மனித மனம் ஒன்றை நினைக்கும். அதனைப் புத்தி தீர்மானிக்கும். சித்

**சிவ சண்முகவடிவேல்**

தம் அங்கீகரிக்கும். அகங்காரம் செயற்படுத்தும் அந்நிகழ்வுகள் யாவும் ஒலி, ஒளி வேகத்தை மிஞ்சிய மின்னல் வேகத்தில் நடந்து முடிந்துவிடும்.

அகங்காரம் சித்தம் புத்திக்கு மனம் முதலாளாக நின்று நினைப்புக் கொம்பர் விட்டுக் கொம்பா தாவிய வண்ணம் இருக்கும். மனம் செல் லும் போக்கில் நாணயக் கயிற்றை இளக்கிக் கொடாவிட்டால் மன நோயாகிவிடும். புத்தியைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் மூளைபபிசகு என்று உலகம் எள்ளி நகையாடும். சரி சித்தத்தை மடக்கிப் பிடித்தால் அவருக்குச் சித்த சுவாதீனம் என்பார்கள். அகங்காரத்தின் சுதந்திரத்தில் தலையிட்டால் ஆணவம் பிடித்தவன் என்றாக்கிவிடும் அயல். என்னவோ நடக்குது நடக்கட்டும் என்று சும்மா இருந்தால், அது

## வெள்ளிநற்சிந்தனை

ஒரு பச்சைப்பேய் என்று பட்டம் கட்டிப் பறக்கவிடுவார்கள் பழகியவர்கள். அந்தக்கரணங்களை அவைபாட்டில் இயங்கவிட்டால் கும்மாளம் போடுவார்கள். எங்கள் வசமாக்கினால் சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தது போல் ஆகிவிடும்.

அடங்காத மனத்தை அடக்கும் தத்துவம் ஆனந்தக் கூத்தர் முயலகாசூரனை அடிக்கீழ் அடக்கி வைத்திருப்பது எனலாம். மனவடக்கம், மனஒடுக்கம் நம்வசத்ததல்ல திருவருள் வசத்ததாகும். "அடங்காத எனனை அடக்கி அடிவைத்து'' என்பது திருமந்திரம்.

தாயுமான சுவாமிகள் மனத்தின் வலிமையை உணர்ந்தாரதலின் ஓர் உண்மையை உபதேசிக்கின்றார். "மதயானையை வசமாக்கி நடத்தலாம். நாகத்தைக் கைக் கொண்டு ஆட்டலாம். இரதத்தைப் பஞ்சலோகமாக்கலாம். மற்றவர் காணாமல் வாழலாம். தேவரை ஏவல் கொள்ளலாம். இளமை யோடு இருக்கலாம். வேறொரு சரீரத்தில் புகலாம். நீர்மேல் நடக்கலாம். நெருப்பில் இருக்கலாம். நிகரற்ற சித்திகள் செய்யலாம். கரடி வெம்புலி வாயைக் கட்டலாம். சிங்கத்தின் முதுகில் செல்லலாம். சிந்தையை அடக்கி சும்மா இருக்கின்ற திறம் அரிது. ஒளிமய ஆனந்தமாக சித்தாகி என் சித்தமீது குடியிருக்கும் அறிவான தெய்வமே.

**"சிந்தையை அடக்கியே சும்மா விருக்கின்ற**
**திறமரிது சித்தாகியென்**
**சித்தமிசை குடிகொண்ட வறி வான தெய்வமே**
**தேஜோ மயானந் தமே''**

தான் அடங்கா மனம் அனைத்தையும் அடக்கும் புதுமை தான் என்னே! என்னே!! □

## ஜனாதிபதிக்கு பாராட்டு

(கொழும்பு)

பல்வேறு கட்சிகள் பாரிய எதிர்ப்புக்களைத் தெரிவித்துள்ள போதிலும் சுனாமி நிவாரணசபை குறித்து ஜனாதிபதி எடுத்துள்ள தீர்மானத்தை இலங்கை மகாஜனக் கட்சி பாராட்டியுள்ளது.

நாட்டில் உள்ள மக்களின் நலன் கருதி எடுக்கப்பட்ட சரியானதொரு அரசியல் தீர்மானம் இதுவாகும் என்று கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமி நிவாரண சபையில் உள்ளடக்கப்பட்டுள்ள அம்சங்களை அமுல்படுத்துவதற்கு தங்களது முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம என்று கட்சியினர் தெரிவித்துள்ளனர். (து-2)

## ஞானச் சுடர் வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் "ஞானச்சுடர்'' ஆனி மாத இதழ் வெளிவந்துள்ளது. (ற-2)

**சிறுவிளம்பரம்**

**மலயாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாட்காவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகினறவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். வவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிா கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

**ஹோட்டல் பிள்ளையார் இன்**
**அறை இல.09,**
**31, மானிப்பாய் வீதி**
**யாழ்ப்பாணம்.**
**T.P - 0779122836**
**நேரம் காலை 9.00 -**
**இரவு 8.30 வரை**

(9567)

# இந்து சிறுவர் இல்லங்களுக்கு இந்துகலாசார அமைச்சர் நிதியுதவி

இலங்கையில் உள்ள அநாதரவற்ற இந்து சிறுவர் இல்லங்களுக்கு உதவும் நோக்கில் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா சிறுவர் இல்லங்களின் நிர்வாகிகளைச சந்தித்து இல்லங்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்து அவற்றுக்கான முதற்கட்ட உதவிகளை கடந்த 28 ஆம திகதி வழங்கினார்.

இதன் அடிப்படையில் 8 சிறுவா இல்லங்களுக்கு உலர் உணவுப் பொருட்களும், நிதியும் அன்றைய தினம் அமைச்சில் வைத்து வழங்கப்பட்டன.

இந்தவகையில் சம்மாந்துறை, வீரமுனை சீர்பாததேவி சிறுவர் இல்லத்துக்கு 2 இலட்சம் ரூபாவும், மட்டக்களப்பு அருட்பணி சிறுமியர் இல்லத்துக்கு 2 இலட்சம் ரூபாவும், யாழ்ப்பாணம் சைவ வித்யா விருத்திச் சங்கத்துக்கு 5 இலட்சம் ரூபாவும், மட்டக்களப்பு மாணிக்கவாசகர் சிறுவர் பராமரிப்பு இல்லத்துக்கு 2 இல்ட்சம் ரூபாவும், திருகோணமலை சிவானந்தா தபோவனத்துக்கு 4 இலட்சம் ரூபாவும், வவுனியா, வேப்பங்குளம் அன்பகத்துக்கு 2 இலட்சம் ரூபாவும் உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

இதேநேரம் மன்னார் உப்புக்குளம் அன்னை இல்லத்துக்கும், மட்டக்களப்பு, சித்தாண்டி யோகர் சுவாமி மகளிர் இல்லத்துக்கு உலா உணவுப் பொருட்கள் கையளிக்கப்பட்டன.

மேற்படி வைபவம் அமைச்சில் வைத்து கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் நடந்தது. இதன் போது கருத்துத் தெரிவித்த கௌரவ அமைச்சர் அவர்கள் தற்போது வழங்கப்படும் உதவிகள் முதற்கட்ட உதவிகளே ஆகும் என்றும் இந்த உதவிகளைக் கொண்டு மேற்படி சிறுவர் இல்லங்களை சிறந்த முறையில் பராமரித்து வருமாறும், இல்லங்களின் செயற்பாடுகளை இனங்கண்டு இரண்டாம் கட்ட உதவிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

இந்த வைபவத்தில் கௌரவ அமைச்சர் அவர்களின் இந்துசமய விவகாரங்களுக்கான ஆலோசகர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் உட்பட அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.(அ)

## இராசி பலன்

**01.07.2005**
**(ஆனி 17, வெள்ளிக்கிழமை)**
**தசமி பிற்பகல் 2.45 மணிவரை**
**அச்சுவினி முற்பகல் 10.46 மணிவரை**
**இராகுகாலம் 10.26 - 11.56மணிவரை**
**சுபநேரம் 5.56 -7.26மணிவரை**
**அமிர்த சித்தம்**

| | |
|---|---|
| மேடம் | வெகுமானம், கௌரமான நிலை, நல்ல முயற்சி, போசன சுகம். |
| இடபம் | சோம்பல் நிலை, தனவிரயம், சுபசெலவு, காரிய இடையூறு. |
| மிதுனம் | தனதானிய சேர்க்கை, தெய்வதரிசனம், சுபகாரியம், நண்பர்கள் சந்திப்பு. |
| கடகம் | பெரியோரால் மதிக்கப்படுதல், இஷ்ட சித்தி, நன்கொடை, தேகநலன். |
| சிங்கம் | அதிகசெலவு, சரீரப்பிரயாசை, கட்டுப் பாடு, நிலைமாற்றம். |
| கன்னி | அஜீரணக் கோளாறு, பொருள் விரயம், காரிய தாமதம், கலகம். |
| துலாம் | மனோதைரியம், அபூர்வ சந்திப்பு, நல்ல தகவல், தெய்வ தரிசனம். |
| விருச்சிகம் | மனமகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி, பகைவர் நேசம், காரிய அனுகூலம். |
| தனுசு | பணக்குறைவு, அஜீரண ரோகம், காரிய இடையூறு, கௌரவக் குறைவு. |
| மகரம் | மனச்சஞ்சலம், தனவிரயம், தெய்வசிந்தை, முயற்சி தாமதம். |
| கும்பம் | நற்கீர்த்தி, தேகநலன், அதிக பிரயாசை, காரிய அனுகூலம். |
| மீனம் | சோம்பல் நிலை, சுபகாரியச் செலவு, கௌரவக் குறைவு, அதிக செலவு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

கஷ்ட, அதிகஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கு

## மேலதிகக் கொடுப்பனவு வழங்காமைக்கு பணம் அனுப்பப்படாமையே காரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கஷ்ட, அதிகஷ்டப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான மேலதிகக் கொடுப்பனவை வழங்குவதற்கான சுற்றறிக்கை இந்த வருடம் மாசி மாதம் வந்துள்ளபோதும் இதற்கான பணம் அனுப்பி வைக்கப்படாமையினாலேயே மேலதிகக் கொடுப்பனவு இன்னும் வழங்கப்படாமல் உள்ளதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் அனலைதீவு, எழுவ்வதீவு, நெடுந்தீவு போன்ற அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவையும், கஷ்டப் பிரதேச பாடசாலை ஆசிரியர்களுக்கு 2 ஆயிரம் ரூபாவையும் மேலதிகக் கொடுப்பனவாக வழங்கும்படி சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இதற்குரிய பணம் இன்னமும் அனுப்பி வைக்கப்படாமையினாலேயே இவர்களுக்குரிய மேலதிகக் கொடுப்பனவுகள் இன்னும் வழங்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-19)

## குத்தகை அடிப்படையில் பஸ்வண்டிகள் மெற்றோ பொலிற்றன் நிறுவனம் வழங்கும்

(கொழும்பு)

மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சபைக்குரிய பஸ் வண்டிகளைச் சாரதிகளுக்கும், உதவியாளர்களுக்கும் குத்தகை அடிப்படையில் வழங்கும் வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் கொத்தணி பஸ் நிறுவன ஊழியர்களுக்கு மாத்திரம் பஸ் வண்டிகள் வழஙகப்படும் என்று மத்திய போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது.

பஸ்வண்டி ஒன்று ஒரு கிலோ மீற்றருக்கு 40 ரூபா என்ற அடிப்படையில் குத்தகைக்கு விடப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய திட்டத்தை கொழும்பு மெற்றோ பொலிற்றன் பஸ் நிறுவனமே ஆரம்பித்துள்ளது. இதன் கீழ் 34 பஸ் வண்டிகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

இந்த செயல்முறைகளினால் கொத்தணி பஸ் நிறுவனங்களின் வருமானம் அதிகரித்துள்ளதாக சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

பஸ் வண்டி ஒன்று 36 கிலோமீற்றர் ஓடும் பட்சத்தில் ஒரு கிலோமீற்றருக்கு 40 ரூபா அறவிடும் அதே வேளை முன்னர் கிலோமீற்றர் ஒன்றிற்கு 23 ரூபா மாத்திரமே வருமானமாகக் கிடைத்ததாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சார்த்த ரீதியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டம் வெற்றியளித்துள்ளதால் நாட்டின் ஏனைய பஸ் நிறுவனங்களுக்கும் இதனை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-9)

## வேலையின்மை, குடும்ப வருமானம் குறித்து எதிர்வரும் ஒக்டோபரில் கணக்கெடுப்பு

(கொழும்பு)

வேலையின்மை மற்றும் குடும்பங்களின் வருமானம் ஆகியன குறிதது இவ்வருடம் இரண்டு கணக்கெடுப்புக்களை நடத்த புள்ளிவிபரவியல் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில இந்தக் கணக்கெடுப்புக்கள் நடத்தப்படவிருப்பதாக புள்ளிவிபரவியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இவ்வருட, ஆரம்பத்தில் இந்தக் கணக்கெடுப்புக்களை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் இந்த நடவடிக்கை தாமதமடைந்ததாக அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நடத்தப்பட்ட கணக்கெடுப்புக்களின்படி 6 இலட்சத்து 79 ஆயிரம் பேர் வேலையில்லாமல் இருப்பது தெரியவந்தது என்று தெரிவித்த ஆணையாளர் நாயகம், இந்த நிலைமை கிராமப் பகுதிகளிலே அதிகமாகக் காணப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளாா.

வேலையில்லாதோரில் 3 இலட்சத்து 60 ஆயிரத்து 550 பேர் பெண்கள என்பது குறிப்பிடத்தக்கது. (ற-2)

## ஹொக்கி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

ரஜரட்ட பல்கலைக்கழகத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட பல்கலைக் கழகங்களுக்கிடையிலான ஹொக்கி சுற்றுப் போட்டி கடந்த 7 ஆம் திகதி ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

பகல் இரவு ஆட்டமாக நடைபெற்ற இப்போட்டியில் பேராதனை அணி யாழ்ப்பாண அணியை 2:0 என்ற வித்தியாசத்தில் வென்றது.

யாழ்ப்பாண அணிக்கும் மொறட்டுவ அணிக்குமிடையே நடந்த போட்டியில் யாழ்ப்பாண அணி 1:0 என்ற வீதத்தில் வென்றது.

தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாண அணி ரஜரட்ட அணியை 1:0 என்ற வித்தியாசத்தில் வென்றது.

இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண அணியும் பேராதனை அணியும் மோதின. யாழ்ப்பாண அணி சிறப்பாக விளையாடிய போதிலும் கோல் எதுவும் பெறாத காரணத்தால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்தது. ஒதுக்கப்பட்ட மேலதிக நேரத்திலும் இரு அணிகளும் கோல் எதுவும் போடாத காரணத்தினால் இரு அணிகளும் இணைச் சம்பியன்களாக அறிவிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றில் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டி ஒன்றில் சம்பியனாக வந்தது. இதுவே முதற்தடவை எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## இன்று ஒரு தகவல்

# நட்பில் குறையில்லை

இந்த உலகத்தில் ஒருவருக்கொருவர் நட்பாக இருப்பது நல்லது தான். அது அவசியமும்கூட! நல்ல நட்பு கூட நல்ல விதமாக உபயோகப்படவேண்டுமென்றால் அதற்குப் புத்திசாலித்தனம் தேவை. இந்தக் கருத்து உங்களுக்குக் கொஞ்சம் வித்தியாசமாகப் படலாம். அதில் உள்ள நியாயத்தைப் புரிந்து கொள்ளவேண்டுமென்றால் இந்தக் கதையை நீங்கள் கேட்க வேண்டும்.

ஒரு காய்ந்துபோன இலை, ஒரு மண்ணாங்கட்டி இவை இரண்டும் நல்ல சிநேகிதம்,மிகவும் பிரியத்தோடு பழகிக்கொண்டிருந்தன. ஒரு நாள் இவையிரண்டும் சேர்ந்து கதைத்துக்கொண்டிருந்தன. நாம் இப்படியே இருந்துகொண்டிருக்கிறோமே! போகிற வழிக்குப் புண்ணியம் தேடிக்கொள்ள வேண்டாமா? என்று கேட்டது இலை. தேடிக்கொள்ள வேண்டியதுதான் அதற்கு என்ன செய்யலாம்? என்று கேட்டது மண்ணாங்கட்டி. "வேறு என்ன செய்வது? மனிதர்கள் எல்லாம் புண்ணியம் தேடிக்கொள்ள என்ன செய்கின்றனர்? காசிக்குப் போகிறார்கள்! அதேபோல் நாமும் காசி யாத்திரை புறப்படவேண்டியதுதான்" என்றது இலை.

சரி! புறப்படுவோம். இருந்தாலும் நீயோ இலை நானோ மண்ணாங்கட்டி. நாமிருவரும் சேர்ந்து காசிக்குப் போவதென்றால் வழியில் நிறைய தொந்தரவுகளை சந்திக்கவேண்டியிருக்கும் என்றது மண்ணாங்கட்டி. அது நியாயம்தான் என்றது இலை: சரியென்று இரண்டுபேரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தன. போகும் வழியில் ஏதாவது துன்பம் வந்தால் இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளவேண்டும். அது தான் அந்த முடிவு. இப்படி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு இரண்டும் புறப்பட்டன. கொஞ்ச நாள் பிரயாணம் செய்தன.

ஒரு நாள் கடுமையான காற்று வீச ஆரம்பித்தது. இலைக்குத் தொந்தரவாகிவிட்டது, மண்ணாங்கட்டி பார்த்தது உடனே ஒப்பந்தப்படி அந்த இலை மீது ஏறி உட்கார்ந்து கொண்டது. அதனால் அந்த இலையைக் காற்று அடித்துக்கொண்டு போகவில்லை! மண்ணாங்கட்டி இலையைக் காப்பாற்றிவிட்டது. ஒருவழியாகக் காற்று நின்றது. மறுபடியும் இரண்டும் பிரயாணம் செய்ய ஆரம்பித்தன.

கொஞ்ச நாள் ஆனது. திடீரென்று ஒரு இடத்தில் மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. உடனே அந்த இலை என்ன செய்தது என்றால் மண்ணாங்கட்டி மீது ஏறி உட்கார்ந்து கொண்டது. அதாவது அதை இது மூடிக்கொண்டது. மழைத் தண்ணீர் மண்ணாங்கட்டி மீது படவில்லை. அதனால் அது கரைந்து போகாமல் இது காப்பாற்றி விட்டது. இரண்டுக்கும் மிகவும் சந்தோஷம். "பார்த்தாயா? நாம் ஒருவருக்கொருவர் எவ்வளவு ஒத்தாசையாக இருக்கிறோம்'' என்று பேசிக் கொண்டு மிகவும் உற்சாகமாக மேற்கொண்டு? பயணம் செய்ய ஆரம்பித்தன.

இன்னும் கொஞ்ச தூரம் போனதும் என்ன ஆயிற்று தெரியுமா? காற்றும் மழையும் சேர்ந்து அடிக்க ஆரம்பித்து விட்டது. காய்ந்த இலை பறந்துபோனது. மண்ணாங்கட்டி கரைந்துவிட்டது. காற்றில் அடிபட்டுப்போன இலை ஒரு கற்குவியலின் மீது போய் விழுந்தது. அங்கே இருந்த ஒரு சின்ன கருங்கல்லிடம் இந்த இலை தனது நிலைமையைச் சொல்லிப் புலம்ப ஆரம்பித்தது. "மண்ணாங்கட்டி இப்படிக் கரைந்து விட்டதே" என்று கூறி வருந்தப்பட்டது.

இப்போது அந்தக் கருங்கல் சொல்லியது " உங்கள் நட்பு சரிதான்... அதில் ஒன்றும் குறையில்லை. இருந்தாலும் காசிக்குப் போவது என்ற உனது நோக்கம் நிறைவேற வேண்டும் என்றால்... நீ என்னை மாதிரி ஒரு கருங்கல்லைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றது. இதுதான் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை. எந்த நட்பு சமயத்தில் எப்படி உதவும் என்பதைப் புரிந்து கொள்வது தான் முக்கியம்.

ஒரு ரயில் மெட்ராஸிலிருந்து புறப்பட்டு திருச்சிக்குப் போய்க் கொண்டிருந்தது. அதில் முதல் வகுப்புப் பெட்டியில் இரண்டு பேர் இருந்தனர். அதில் ஒருவர் இன்னொருவரைப் பார்த்துச் சொன்னார். "நல்ல வேளை...நீங்களும் எனக்குத் துணையாக வருவது நல்லதாகிவிட்டது! ஒருவருக்கொருவர் துணையாக இருக்கலாம். நான் தனியே செல்வதற்குப் பயந்தேன். ஏனென்றால் என்னிடம் 10ஆயிரம் ரூபா பணம் உள்ளது. அதைப் பத்திரமாகக் கொண்டுபோக வேண்டுமென்று கவலைப்பட்டேன் நீங்கள் துணையாக இருப்பது நல்லதாகிவிட்டது" என்றார்.

அடுத்த ஆள் இதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டார். பணத்தை அடித்துக்கொண்டு போகவேண்டும் என்று திட்டம் போட்டார். பணம் வைத்திருந்தவர் லேசாகக் கண்ணை மூடியவுடன் இவர் பரபரப்பாக அவரது பெட்டியைத் திறந்தார். பணத்தைக் காணவில்லை.

அவர் வைத்திருந்த மற்ற துணிமணியெல்லாம் உதறிப் பார்த்தார். பணமில்லை. சரி... ஆசாமி நம்மிடம் பொய் சொல்லியிருக்கிறார் என்று நினைத்துக்கொண்டார். விடிந்தது ரயில் திருச்சிக்குப் போய்ச்சேர்ந்தது. "அப்பாடா பணத்தை பத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்துவிட்டேன்" என்றார் அவர்.எங்கே சார் வைத்திருந்தீர்கள் பணத்தை? என்று ஆர்வமாகக் கேட்டார். இவர்.

அவர் "நீங்கள் பாத்ரூம் போயிருந்த சமயத்தில் எனது பணத்தை உங்கள் பெட்டியில் வைத்துவிட்டேன் சார்... பத்திரமாக இருக்கட்டும் என்று! இப்போது எடுத்துக்கொண்டேன்! மிக்க நன்றி" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகவே அரசு பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தியது

## -வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம்

(வவுனியா)

சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாகவே சுனாமி கடல் பேரழிவுக்கான பொதுக்கட்டமைப்பினை ஏற்படுத்த அரசாங்கம் முடிவு செய்தது. பொதுக்கட்டமைப்பை உருவாக்காவிட்டால் சர்வதேச சமூகத்தின் ஏனைய நிதியுதவிகளும் கிடைக்காது போய்விடும் என்ற அச்சம் அரசுக்கு ஏற்பட்டிருந்தது என விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் தெரிவித்துள்ளார்.

மாவட்டத் திணைக்களத் தலைவர்களுடனான சந்திப்பு புலிகளின் அரசியல்துறைப் பணிமனையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் பல நெருக்கடிகளுக்கும் மத்தியில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற பொறுப்பு அரச அதிகாரிகளைச் சார்ந்தது.

வவுனியா மாவட்டத்தில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் பலர் உள்ளனர். அவர்களுடைய வாழ்க்கையினை வளமாக்க நாங்கள் இயன்ற அளவு உதவவேண்டும் இடம்பெயர்ந்த மக்களுக்கான தீர்வு என்பது விரைவில் காணப்படவேண்டும்.

கடந்த 7 ஆண்டுகளாக இன்னமும் பலர் அகதிமுகாம்களிலேயே வசித்து வருகின்றனர். மக்களுடைய அன்றாட அடிப்படைப்பிரச்சினைக்கு தீர்வை அல்லது அதற்கான வழிகளைக்காட்டுவதன் மூலம் சமூகத்தில் பாரிய மாற்றங்களை நாங்கள் காணமுடியும்.

யூலை 5ஆம்திகதி எங்களுடைய உயர்ந்த தியாகிகளான கரும்புலிகளை நினைவுகூரும் தினமாகும். தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கின்றார்கள் என்பதனை அந்த நிகழ்வின் மூலம் நாங்கள் வெளிப்படுத்த வேண்டும். உயர்ந்த தியாகத்தினையும், அர்ப்பணிப்புகளையும் நிலைநிறுத்துகின்ற வகையில் உணர்வுபூர்வமாக நிகழ்வில் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். (ந-4)


# சிறுபான்மை அரசை வீழ்த்த ஐ.தே.க ஒருபோதும் நடவடிக்கை எடுக்காது

## -ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

சிறுபான்மை அரசாக இருக்கும் தற்போதைய அரசை வீழ்த்தும் நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் மேற்கொள்ளாது என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள் ளார்.

கண்டி தலவத்து ஓயாவில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டிய அதே வேளை, இடை நிறுத்தப்பட்ட சமாதான நடவடிக்கைகளும் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

பொருளாதாரம் மிகவும் பின் தங்கிய நிலை யில் பொதுமக்கள் வாழ்க்கைச் செலவை சமாளிப்பதில் பெரும் சங்கடங்களை எதிர்நோக்குவதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார். (ந-9)

# இளைஞனைக் காணவில்லை; ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

## தகவல் தெரிந்தால் அறியத்தருமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இரு மாதங்களாக இளைஞனைக் காணவில்லை என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொக்குவிலைச் சேர்ந்த மகாலிங்கம் விஜகாந் (வயது-23) என்ற இளைஞன் கா.பொ.த உயர்தர பரீட்சைக்காக நண்பர்களுடன் இணைந்து படிப்பதாகக் கூறி கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வீட்டை விட்டுச் சென்றதாகவும் ஆனால் கா.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவடையும் நிலையிலும் இன்னமும் வீட்டுக்குத் திரும்பவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் இளைஞனை வீட்டுக்காரர்களும் நண்பர்களும் இணைந்து பல இடங்களிலும் தேடிப் பார்த்த வேளையிலும் அவ்இளைஞன் காணப்படாததனால் இளைஞனின் நண்பரும் தந்தையாரும் நேற்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

இவ்இளைஞன் பற்றிய தகவல்கள் ஏதாவது கிடைக்கப்பெற்றால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்திற்கு அறியத்தரும்படி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் றோகித பிரியதர்சன கேட்டுள்ளார். (ந-19)

# வடக்கு - கிழக்கின் துரித அபிவிருத்தி புலிகளின் செயற்பாட்டைக் குறைக்கும்

## அமைச்சர் டி.யு.குணசேகர எதிர்வுகூறல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் துரித அபிவிருத்தியை மேற்கொள்ளும் பட்சத்தில் தமிழ் மக்கள் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைக் குறைத்துக் கொள்ள முடியும் என அரசியல் அமைப்பு தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் பி.யு.குணசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவக் கட்டமைப்பு ஏற்படாத பட்சத்தில் ஐக்கிய நாடுகள் சபையோ வேறு நாடுகளோ வடக்கு-கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்ய நிதி உதவி வழங்க வாய்ப்பு இருந்ததாகவும்,

இவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தால் விடுதலைப்புலிகள் சர்வதேச சமூகங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும் எனவும்,

சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவக் கட்டமைப்பில் கைச்சாத்திட்டதன் மூலம், விடுதலைப்புலிகள் இலங்கை அரசாங்கத்தை முதன் முறையாக ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஐக்கிய தேசிய முன்னணி கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தத்தில் கட்டுப்பாடற்ற பிரதேசம் எனவும் கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால் இந்த ஒப்பந்தத்தில் சகல பிரதேசங்களும் இலங்கை அரசாங்கத்துக்கு உட்பட்டவை என்று குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் டி.யு.குணசேகர தெரிவித்துள்ளார். (அ-2)

# சாரதிகளின் கவனயீனத்தால் வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடம் நாட்டில் இடம்பெற்ற விபத்துக்களால் 1325 பேர் உயிரிழந்துள்ளனர் என்று மக்கள் பாதுகாப்புச் சட்டம் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ தெரிவித்துள்ளார்.

சாரதிகளின் கவனயீனம் காரணமாக அதிகமான விபத்துக்கள் ஏற்பட்டிருப்பதாகக் கூறியியுள்ள செயலாளர் இவ்வாறான சாரதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (அ-2)

# சுனாமி விசேட ஒழுங்குமுறைச் சட்டத்தின் தவறான பயன்பாடு தண்டனைக்குரிய குற்றம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததாகக் கூறி மரண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு போலி ஆவணங்களை சமர்ப்பிப்போருக்கு எதிராக கடும் தண்டனை வழங்கப்படும் என்று நீதிமற்றும் நீதி மறுசீரமைப்பு அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறான குற்றச்செயல்களில் குற்றவாளியாக இனம் காணப்படுபவர்கள் ஐந்து ஆண்டிற்கு அதிகரிக்காத கடூழய சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று நீதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி சுனாமி விசேட ஒழுங்குமுறைச் சட்டத்தில் 3ஆம் பிரிவின் கீழ் உயிரிழந்த அல்லது காணாமல் போனவருக்கு மரண அத்தாட்சிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் முறைகளை மீறுவோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தச் சட்டத்தின் அடிப்படையில் மரண அத்தாட்சிப் பத்திரத்திற்காக பொய்யான தகவல்களை வழங்குகின்றமை போலி ஆவணங்களை முன்வைத்தல் உயிரிழந்ததாக அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட ஒருவர் உயிருடன் இருப்பின் அது தொடர்பான தகவல்களை பரிபாலன நாயகத்திற்கு வழங்காமை அவ்வாறு உயிருடன் இருப்பவருக்கு வழங்கப்பட்டுள்ள மரண அத் தாட்சிப் பத்திரங்களை பயன்படுத்துதல் என்பன குற்றங்களாக இனம் காணப்பட்டுள்ளன.

இவ்வாறான குற்றங்களுக்குத் தண்டனை வழங்குவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் தற்போது நடைமுறையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-9)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

## பட்டமளிப்பு விழா அரங்கில் எழுந்து நிற்காத ஊடகவியலாளர்கள்

27 சவீதா பல்கலைக்கழகத்தை கார் சென்றடைந்ததும், மூவரும் காரில் இருந்து இறங்கிக் கொண்டோம். பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலில் சிறிய - அழகான முருகன் ஆலயம், அதனை அடுத்தாற்போல் அழகிய மாடிக்கட்டடங்கள்.

பட்டமளிப்பு விழா நடைபெறும் அரங்கிற்கு மாணவர்கள் எம்மை அழைத்துச் சென்றனர்.

பிறைவடிவில் அமைந்த, குளிரூட்டப்பட்ட அந்த அரங்கிற்குள் இரண்டாவது வரிசை ஆசனங்கள் ஊடகவியலாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன.

மூவரும் அமர்ந்துகொண்டோம். ஏற்கனவே வந்திருந்த ஊடகவியலாளர்களும் அங்கு அமர்ந்திருந்தனர்.

### ஊடகவியலாளர்களுக்கு உரிய கௌரவம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவிற்கும் சவீதா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிற்கும் இடையே நிறைய வேறுபாடு உண்டு.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக பத்திரிகை ஆசிரியர்களுக்கு அழைப்பிதழ் அனுப்புவது வழக்கம். அந்த அழைப்பிதழ்களோடு பத்திரிகை ஆசிரியர்கள் சென்றால் யார், எவர் என்ற கேள்விகள் இன்றி, அங்கால, இங்கால என்ற கலைப்புகளே கைலாசபதி அரங்கில் நடக்கும்.

பதிவாளரால் அனுப்பப்பட்ட அந்த அழைப்புகள் பிரமுகர்களுக்கானதாக இருந்தபோதிலும் யாழ்.பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவை, ஒழுங்குற நடத்துவதற்காக ஓடியாடும் பணியாளர்கள் பிரமுகர்களுக்கான அழைப்பிதழ்களுக்குக் கூட உரிய மதிப்பளிப்பதில்லை என்பது வேதனைக்குரிய விடயம்.

இதன் காரணமாகவே பிரமுகர்கள் பலர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதில்லை என்ற உண்மை இப் பயணக கட்டுரையினூடாகவாவது உரியவர்களுக்குச் சென்றடையட்டும்.

பட்டமளிப்பு விழாவிற்கு பத்திரிகை ஆசிரியர்களை அழைத்தால் அவர்களுக்கான ஆசனங்களை ஒதுக்கிவிடுவதே உயர்ந்த பண்பு. இதைவிடுத்து, அழைப்பிதழை கிளினிக் காட்போல கையில் வைத்துக் கொண்டு அங்கும் இங்கும் ஓடித்திரிவது, அழைத்தவர்களுக்கும், அழைக்கப்பட்டவர்களுக்கும் அழகல்ல.

பூந்தமல்லி சவீதா பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் ஊடகவியலாளர்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் அங்கிருந்த உயர்ந்த ஒழுங்கமைப்பை எடுத்துக்காட்டியது. அதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தன் ஒழுங்கமைப்பை குறைத்து மதிப்பதாக எவரேனும் நினைத்தால் அது அவர்களின் தவறேயன்றி நமதல்ல.

ஏனெனில் இங்கு குறிப்பிடப்படும் ஒவ்வொரு கருத்துக்களும் எம்மைப் புடம் போடுவதற்காகவேயன்றி குறைகாணுதற்கல்ல என்பது உணரப்பட வேண்டியதாகும்.

### நேரம் கடந்தது

மாலை நான்கு மணிக்கு பட்டமளிப்பென்பதாக இருந்தபோதிலும் 4.30 மணிக்கே நிகழ்வு ஆரம்பமாகியது. நேரம் தாழ்த்தி நிகழ்வு நடத்தும் பண்பாடு யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, தமிழகத்திலும் உண்டென்பதைக் கண்டு என் தோள் புயங்களை உயர்த்திக்கொண்டேன்.

கல்வியில், கம்பியூட்டரில், தொழில்நுட்பத்தில், சுயதொழில் முயற்சியில் தமிழக மக்களுக்கு ஈடுகொடுக்க முடியாதுவிட்டாலும், நேரம் தாழ்த்துவதில் நாமும் குறைந்தவர்களல்ல என்ற ஒப்புமையிலாவது உயர்ந்தன நம் தோள்கள் என்று பெருமைப்பட்டேன்.

என் செய்வது நம் தோள்புயம் உயர்வது களவில், கசிப்பில், நேரம் தாழ்த்துவதில் என்றாகிவிட்டது! எல்லாம் எம் தலைவிதி என்பதோடு ஆறுதல் அடைவதே ஆற்றுகை என்பதால், உயர்ந்த தோளுக்கு மேலால் எழுந்த பெருமூச்சை ஒருவாறு அடக்கிக்கொண்டேன்.

பல்மருத்துவர்களுக்கான பட்டமளிப்பு வழா இன்னும் சில நிமிடங்களில் ஆரம்பமாகுமென ஒலிபெருக்கி ஓசை பரப்பியது.

குடை, ஆலவட்டம், மேளதாளங்களுடன் வேந்தர், துணைவேந்தர், பீடாதிபதிகள் அழைத்து வரப்படுவார்கள் என்ற கற்பனையில் இருந்த நான் நாதஸ்வர இசைக்காக என் செவிகளில் இடம் ஒதுக்கினேன்.

திடீரென அரங்கில் இருந்தவர்கள் எழுந்தார்கள். எந்த ஆரவாரமுமின்றி, வேந்தர், துணைவேந்தர் உள்ளிட்ட கல்வியியலாளர்கள் அழைத்து வரப்பட்டனர். நிலைமையை உணர்ந்த நான் உடனடியாக எழமுற்பட்டேன்.

### தடுத்தன கரங்கள்

பட்டமளிப்பு விழாவிற்காக, துணைவேந்தர், பீடாதிபதிகள் சகிதம் வேந்தர் அழைத்து வரப்படும் போது, அவையில் இருக்கும் மாணவர்கள், பெற்றோர்கள், பிரமுகர்கள் எழுந்து நிற்பது மரபு. அதன் அடிப்படையிலேயே ஊடகவியலாளர்களின் வரிசையில் இருந்த நானும் எழுந்து நிற்க முற்பட்டேன்.

நான் எழமுற்பட்டதும், எனக்கருகில் இருந்த செய்தியாளர் திரு.குமரன் என் கையைப் பற்றிஇழுத்து எழவிடாது தடுத்துக் கொண்டார். அவரின் அறிவுறுத்தலுக்கமைய ஆசனத்தில் அமர்ந்து கொண்டேன். ஒருமாதிரியாக இருந்தது. என் உடம்பு ஆசனத்தில் இருந்தாலும் உள்ளம் எழுந்து நின்றதென்றே கூறவேண்டும்.

மெல்லத்திரும்பிப் பார்த்தேன். ஊடகவியலாளர்களைத் தவிர மற்றெல்லோரும் எழுந்து நின்றார்கள்.

ஊடகவியலாளர்கள் எழுந்த நிற்காததற்கான காரணம் என்ன? பட்டமளிப்பு விழா நடைபெறும் இடத்தில் வைத்து வினவுவது அவ்வளவு அழகல்ல என்பதால் அமைதியாக இருந்தேன்.

எனினும், பேராசிரியர்களை அழைத்து வந்தபோது ஊடகவியலாளர்கள் அமர்ந்திருந்த முறை எனக்கு உடன்பாடானதல்ல.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் எனக்குப் பிடித்தமான இரண்டு நடைமுறைகள் உண்டு. அதில் ஒன்று, பட்டம் பெறும் மாணவர்கள் ஊர்வலமாகச் செல்ல துணைவேந்தர், பீடாதிபதிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சகிதம் பல்கலைக்கழக வேந்தர் குடை, ஆலவட்டம், மேளதாளத்துடன் அழைத்துவரப்படும் நிகழ்வு.

மற்றையது பட்டமளிப்பிற்காக வருகைதரும் கல்வியியலாளர்களுககு அரங்கில் இருக்கும் அனைவரும் எழுந்து நின்று மதிப்பளிக்கும் பண்பு.

இந்த இரண்டு நிகழ்வும் இலங்கையின் பல்கலைக் கழகங்களில் நடைபெற்றாலும் அது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்போது அதற்கு இருக்கின்ற அழகு தனித்துவமானது.

என். விஜயன்

கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற ஔவையின் வாககிற்குப் பொருள் தரும் இடம் அதுவென நான் நினைப்பதுண்டு.

ஆயினும் என் நினைப்பைக் கலைப்பதாக சவீதா பல்கலைக்கழகப் பட்டமளிப்பு நிகழ்வு அமைந்துவிட்டது.

பட்டமளிப்பிற்காகப் பல்கலைக்கழகவேந்தர் உட்பட கல்வியியலாளர்கள் வருகை தந்த போது ஊடகவியலாளர்கள் உட்கார்ந்திருந்தமை அவர்களின் கர்வத்தின் உச்சமென்றே நான் கருதினேன். இது பற்றி பட்டமளிப்பு முடிவுற்றபின் செய்தியாளர் திரு.குமரனுடன் சம்பாசித்தேன்.


அது பற்றி அடுத்த கட்டுரையில் பார்க்கலாம். (திங்கள் வளரும்)

## ஹக்ரப் ஹொக்லண்டின் கிளிநொச்சி விஜயத்திலிருந்து...



விசேட உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சி சந்திரன் விளையாட்டரங்கில் வந்திறங்கிய கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹொக்லண்ட் குழுவினரை விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் வரவேற்று அழைத்துச் செல்கிறார்...





சமாதான செயலகத்தில் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு முன்னர், வெலிக்கந்தையில் விடுதலைப் புலிப் போராளிகள் இராணுவ வழித்துணையுடன் பயணம் செய்தபோது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதல் குறித்து சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் விளக்குவதையும், சேதமடைந்த பேருந்தை கண்காணிப்புக் குழுத்தலைவரும் அவரது உதவியாளர்களும் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# சனிப் பெயர்ச்சி

**27.06.2005ஆம் திகதி சனிபகவான் மிதுன ராசியினின்று கடக ராசிக்குச் செல்கிறார். இந்த சனிப் பெயர்ச்சியால் 12 இராசிக்கும் 27 நட்சத்திரங்களுக்கும் உரிய பலன்களும் கடைப்பிடிக்க வேண்டிய பரிகாரங்களும் இங்கே தரப்படவுள்ளன.**

## மீனம்

*அழகிய உடல் அமைப்பும் மற்றவர்களை கவரும் கண்களையும் கொண்ட மீன ராசி அன்பர்களே!*

உங்களுக்கு சனி பகவான் வரும் 27.06.2005இல் கடக ராசிக்கு செல்வதால் உங்களுக்கு அர்த்தாஷ்டமச் சனி முடிகிறது. சனி 5ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்ய உள்ளதால் உங்களின் வலிமை அதிகரிக்கும். கடந்த காலங்களில் உங்களுக்கு நிலவிய பொருளாதார சங்கடங்கள் எல்லாம் ஓரளவுக்கு நிவர்த்தியாகி மனதில் புரிப்பு ஏற்படும் அளவிற்கு இனிய சம்பவங்கள் அரங்கேறும். உங்கள் ராசியாதிபதி குரு 19.09.2005முடிய சமசப்தஸ்தானத்திலும் அதன்பிறகு 20.10.2006முதல் 16.11.2007 முடிய 9ஆம் வீட்டிலும் சஞ்சாரம்செய்ய உள்ளது. உங்களுக்கு பல்வேறு வகையில் அசுர பலத்தைத் தரும் சிலருக்கு வீடு வாகன, யோகம் ஏற்படும். மணமாகாதவர்களுக்கு மணவாழ்க்கை கிட்டும்.

பு,ர்வீக ரீதியாக தீர்க்கப்படாத பிரச்சினைகள்எல்லாம் தீர்ந்து ஏற்றமிகு பலன் உண்டாகும். சர்ப்ப கிரகமான ராகு ஜென்ம ராசியிலும் கேது 7ஆம் வீட்டிலும் 4.3.2005முதல் 7ஆம் வீட்டிலும் 4.3.2005முதல் 21.09.2006 முடிய சஞ்சாரம் செய்வதால் சிக்கல்கள் பல இல்லற வாழ்வில் ஏற்படும். வேலை இல்லாத இளைஞர்களுக்கு பரிபுரணமான அனுகூலப் பலன் கிடைக்கும். உங்களின் கஷ்டங்கள் யாவும் படிப்படியாக குறையும் நீங்கள் தொட்டதெல்லாம் துலங்கக் கூடிய உன்னதமான காலமாகும்.

**உடல்ஆரோக்கியம்:** உங்களின் உடல்நிலையில் சற்றே முன்னேற்றம் உண்டாகும். சோர்வுகள் மறையும் அடிக்கடி ஏற்பட்ட வெளியுர் பயணங்களின் அலைச்சலும் டென்சனும் குறைந்து மன அமைதி ஏற்படும் மருத்துவச் செலவுகள் மறையும் மனைவி மற்றும் குழந்தைகளின ஆரோக்கியம் நன்றாக அமையும். ஓரளவிற்கு சுறுசுறுப்புடன் அன்றாட செயல்களில் சீராக ஈடுபடுகின்ற ஆற்றலை பெறுவீர்கள்.

**கொடுக்கல் வாங்கல்:** கொடுக்கல் வாங்கலில் சற்றே நிதானமுடன் ஈடுபடவேண்டிய காலமாகும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பெரிய அளவில் பாதிப்பு இருக்காது சிக்கல்கள் குறையும் பணம் கொடுத்த இடத்தில் சரியான நேரத்ததிற்கு கைக்கு கிடைக்கும். வம்பு வழக்குகளால் ஏற்பட்ட அலைச்சல் டென்ஷன் குறைந்து மனதில அமைதி ஏற்படும்பு,ர்வீக சொத்துக்களின் மேல் இருந்த கடன்களும் மெல்ல விலகி விடும். வீடு மனை வண்டி வாகனம் தாமதித்து கிட்டும்.

**தொழில் வியாபாரம்:** செய்யும் தொழில் வியாபாரத்தில் முன்னேற்றநிலையை அடைவீர்கள். இதுவரை தடைப்பட்ட புதிய முயற்சிகளும் சிறப்பாக நடைபெறும. நவீன தொழில் நுட்பக் கருவிகளை வாங்குவது பெரிய முதலீடுகளை ஈடுபடுத்துவது போன்றவற்றை நிதானமுடன் செய்தால் சிறப்பான அனுகூலப் பலனை அடையமுடியும். கூட்டுத்தொழிலில் சிறப்பான இலாபத்தையும் முன்னேற்றத்தையும் பெறுவீர்கள்.

**உத்தியோகஸ்தர்களுக்கு :** உத்தியோக நிலையில் அதிகாரிகளின் ஆதரவையும் உடன் பணிபுரியும் தோழர்களின் உதவியையும் பெறுவீர்கள். இடமாறுதலால் ஏற்பட்ட அலைச்சல்களும் குறைந்து குடும்பத்தில் சேருகின்ற அமைப்பால் மனம் மகிழ்ச்சியடைவீர்கள். பதவி ஊதிய உயர்வு படிப்படியாக அமையும். புதிய வேலை தேடுபவர்களுக்கு அவர்கள் கற்ற கல்வியின் பகுதிக்கு ஏற்ப சிறப்பான நிரந்தரமான பணியும் அமையும். அனைவரையும் சறறு அனுசரித்துப் போவது நல்லது.

**பெண்களுக்கு:** உடல்நிலை சீரடையும். இதுவரை நிலவிய கற்பக்கோளாறுகளும் வயிற்று உபாதைகளில் இருந்தும் விடுபட்டு சீரடைவீர்கள். குடும்ப வாழ்வில் நிலவிய குழப்பமான நிலைகள் மறைந்து கணவன் மனைவி உறவில் திருப்திகரமான நிலை மன அமைதியை ஏற்படுத்தும். திருமண சுபகாரிய முயற்சிகளுக்கு நிலவிய இடையு,றுகள் குறைந்து முயற்சியில் அனுகூலப்பலன் கிட்டும். பணியில் உயர்வு ஏற்படும்.

**மாணவ மாணவியருக்கு:** கல்வியிலும் மற்ற முயற்சிகளிலும் சிறப்பான ஏற்றமும் முன்னேற்றமும் அமையும். சாதனை செய்ய எண்ணுபவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள முடியும். கணணி மற்றும் ஓவியம், கதைஈ கவிதை, கட்டுரைப்போட்டிகளில் கலந்து கொண்டு பாராட்டைப் பெறுவீர்கள். மேற் கல்விக்காக நீங்கள் நெருக்கமான உறவினர் ஒருவரின் உதவியைப் பெறுவீர்கள் மனதில் பு,ரிப்பு ஏற்படும்.

**கலைஞர்களுக்கு:** உங்களது வாய்ப்புகளில் சிறப்பான நிலைகள் எறபடும் தனவரவுகள் மனதிற்கு திருப்தியாக அமையும். எடுக்கின்ற முயற்சிகளால் உங்கள் படம் ரசிகர்களை மனமகிழ்ச்சியடையச் செய்யும். மற்றவர்களால் ஏற்பட்ட பிரச்சினைகளும் விலகி ஏற்ற மிகு பலனை அடைவீர்கள்.

**பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு:** அரசியலில் நிலவிய சாதகமற்ற போக்குகளும் முன் விரோதமும் குறைந்து உங்களைப் பாராட்டுவார்கள். தலைமைப்பதவிக்கு ஏற்பட்ட நெருக்கடிகள் நீஙகும். வெளியு,ர், வெளிநாட்டுப்பயணம் அலைச்சல்கள் குறைந்துவிடும். மற்றவர்களின் உதவி கிட்டும்.

**தொழிலாளர்களுக்கு:** முதலாளி, தொழிலாளி இடையே நிலவிய கருத்துவேறுபாடுகள் குறைந்து முன்னேற்றத்தை அடைவீர்கள் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் அமையும். குடும்பத்தின் தேவைகள் பு,ர்த்தியாகும். புதிய வேலை வாய்ப்புக்களை இக்காலத்தில் அடைவீர்கள்.

**சனிபகவான் குரு சாரத்தில் புனர்பூசம் நட்சத்திரத்தில் சஞ்சாரம்**
**27.06.2005முதல் 21.07.2005வரை**

இது உங்களது வாழ்வில் மிகவும் சிறப்பான ஏற்றங்களை ஏற்படுத்திடும் காலமாக அமையும். ஜலத்தொடர்பானவைகளில் இருந்து விடுபடுவீர்கள். பலமும் வலிமையும் கூடும். புத்துணர்வுடன் அன்றாட செயல்களில் ஈடுபடுவீர்கள். மனைவி மற்றும் குழந்தைகளால் மன மகிழ்ச்சி உண்டாகும். எடுக்கும் காரியம் யாவும் வெற்றி தரும் நீண்ட நாள் வம்பு வழக்குகள் பைசலாகிவிடும்.

# உங்களுக்கு எப்படி?

குடும்பத்தில் பொருளாதார நிலையில் மேம்பாடு உண்டாகும். சுபகாரியம் சிறப்பாக நிறைவேறி புத்திர பாக்கியமும் கிட்டும். தொழில் வியாபாரம் கூட்டுத்தொழில் வியாபாரம் கமிஷன் ஏஜென்ஸி கான்டிராக்ட் போன்றவை மூலம் பெரியளவில் இலாபமும் உயர்வும் அடைவீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் சிறப்பான அனுகூலப்பலன் கிட்டும். அரசியலிலும் கொடிகட்டிப் பறப்பீர்கள். நல்ல நண்பர்கள் அமைவார்கள்.

**சனிபகவான் சனி சாரத்தில் பூசம் நட்சத்திரத்தில் சஞ்சாரம்**
**22.07.2005முதல் 19.11.2005வரை**

ஆரோக்கியம் சிறு சிறு வாயுக்கோளாறுகளால் பாதிப்படைந்து சிறிதளவு மருத்துவச் செலவுக்குப் பின்பே சீரடையும் மனைவி புத்திரர் சோர்வு மறையும் குடும்பத்தில் நிலவிய மந்தமானநிலை சற்று மாறும். பொருளாதார நிலையில் பண வரவுகள் தாமதமாக வந்தாலும் தாராளமாக வரும். கடன்களைப் பிறபாதியில தான் விலக்க முடியும். கணவன் மனைவி இடையே சிறு சிறு வாக்கு வாதம் நடைபெற்றாலும் ஒற்றுமை நிலவும். கடன் தீரும். தொழில் உத்தியோக ரீதியாக படிப்படியான முன் னேற்றம் உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் நிதானம் தேவை. வியாபாரிகள் வேலையாட்களை அனுசரித்துப் போகவேண்டும். திருமண சுபமுயற்சிகளை மேற்கொள்ள முடியும். அரசியல் வாதிகளுக்கு அனைவரிடமும் சற்று கவனமுடன் பழகுவது மிக நன்மை தரும்.

**சனிபகவான் வக்ரகதியில்**
**20.11.2005முதல் 06.04.2006வரை**

எடுக்கும் காரியம் தடைப்படும். உடல் நலனில் மந்தமான நிலையும் சோம்பலும் குடிகொள்ளும். மனைவிக்கு கற்பக்கோளாறுகளையும் பிள்ளைகளால் மன சஞ்சலத்தையும் எதிர்கொள்வீர்கள். குடும்பத்தில் அதிகமான மருத்துவச் செலவுகள் வீண் பயணங்களால் அலைச்சல் ரென்ஷன உண்டாகும். திருமண சுபகாரியம் இடையுறுகளால் தடைப்படும். உற்றார் உறவினர் நண்பர்கள் வீண் விரோதம் காட்டுவார்கள்.

கணவன் மனைவி இடையே மன கசப்புத்தரும் சம்பவங்கள் நடைபெறும். தொழில் வியாபார நிலையில் சோதனைகளும் கூட்டுத் தொழில் கூட்டாளிகளிடம் பிரிவையும் ஏற்படுத்தும். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பாராத மாற்றம் உண்டாகி அலைய நேரிடும். உள்ள பணியினை முடிக்க முடியாதபடி வேலைப்பளு கூடும். அரசியலில் வீண்பழி வம்பு வழக்கு உண்டாகும். மாணவர்களின் கல்வி மந்தமடையும்.

**சனிபகவான் சனி சாரத்தில் பூசம் நட்சத்திரத்தில் சஞ்சாரம்**
**07.04.2006 முதல் 27.07.2006வரை**

தொழிலில் என்னதான் விழுந்து விழுந்து பாடுபட்டாலும் உள்ளூரிலும் வெளியு,ரிலும் குறைவான இலாபத்தினையே அடையமுடியும். வீண் அலைச்சல் சற்று காணப்பட்டாலும் முயற்சியினை மேற்கொண்டு உயர்வைச் சந்திப்பீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடியும் கூடுதல் பொறுபபுச் சுமையும் ஏற்பட்டாலும்கூட பணிபுரிபவர்களையும் அதிகாரிகளையும் அனுசரித்துப்போனால் சற்று மேன்மையடையலாம். பதவி ஊதிய உயர்வுகள் தாமதமாகவே அமையும். பொருளாதார நிலையில் ஏற்படும் கஷ்டங்களை சற்றுத் துணிவுடன் ஓரளவு சமாளித்து விடுவீர்கள். திருமண சுபகாரியம் முயற்சி செய்தால் பிற்பாதியில் சாதகமாகும். உடல்நலம் சுமாராக அமையும். செலவுகளை சுருக்குவதால் ஓரளவு சேமிப்பை அடைவீர்கள். அரசியலில் உடன இருப்பவர்களால் சிறு சிறு சோதனைகள் உண்டாகுமே தவிர அதிக கெடுதி இருக்காது.

**சனிபகவான் புதன் சாரத்தில் ஆயிலியம் நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம்**
**28.07.2006 முதல் 02.12.2006வரை**

உங்களுக்கு நன்மை தீமை கலந்த பலன்களே ஏற்படுத்தும். உடல் நலனில் சிறு சிறு ஜலத்தொடர்பான உடல் உபாதைகள் ஏற்பட்டு விலகும். சிறிதளவு மருத்துவச்செலவுகளை தவிர்க்கமுடியாது. மனைவியின் கற்பக்கோளாறுகள் விலகி புத்திர பாக்கியம் எண்ணும் மழலைச் சொல்லைக் கேட்பீர்கள். குழந்தைகளால் உங்களுக்கு உதவியும் அனுகூலமும் கிட்டும். பொருளாதார நிலை மந்தமாகவே இருக்கும். சிக்கனமாக செலவு செய்யவேண்டும். தொழில் வியாபார நிலையில் நிதானமுடன் செயல்ப்பட்டு வேலையாட்களை அனுசரித்துப் போனால் ஓரளவு இலாபமும் அனுகூலமும் கிட்டும். உத்தியோக நிலையில் அதிகாரிகள் மற்றும் உடன் ஊழியர்களின் உதவிகளைப் பெறுவீர்கள். மாணவர்கள் முயற்சி செய்தால் சாதனை புரிய முடியும். விவசாயிகளுக்கு ஏற்றம் உண்டாகும்.

**சனிபகவான் வக்ரகதியில்**
**03.12.2006முதல் 19.04.2007வரை**

தேகநிலை சிறப்பாக இருக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். மனைவி மற்றும் குழந்தைகளுக்கு சுகமான சுபீட்சமான வாழ்வு அமையப்பெறும். உறவினர்களின் வருகையால் அனுகூலம் உண்டாகும். வெளி வட்டாரப் பழக்கம் நன்மையாக அமையும் பொருளாதார நிலையில் தாராளமான பண வரவுகளால் வீட்டைக் கட்டிமுடித்து குடி போகும் அமைப்பு வண்டி வாகன யோகம் ஆடை ஆபரணச் சேர்க்கையும் அமையும். கடந்தகால கஷ்டங்கள் கடன்கள் மறையும்.

கணவன் மனைவி ஒற்றுமையுடன் இருப்பார்கள். தொழல் வியாபாரத்தில் போட்டி பொறாமைகள் வரும் போதும் நவீன தொழில் கருவிகளை நிறைய வாங்குவீர்கள். உத்தியோக நிலையில் பணி நிரந்தரமும் நிலுவைத் தொகை போனஸ் ஊதிய உயர்வுகளால் மன மகிழ்ச்சி உண்டாகும். கெளரவம் தரும் பதவிகள் அரசியல் வாதிகளுக்கு கிட்டும். மாணவர்களின் கல்வியில் ஏற்றம் உண்டாகும். விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல் கிட்டும்.

**சனிபகவான் புதன் சாரத்தில் ஆயிலியம் நட்சத்திரத்தில் சஞ்சாரம்**
**20.04.2007முதல் 05.08.2007வரை**

புர்வீக சொத்துக்களின் மேல்நிலவிய வம்பு வழக்குகள் வசூலாகி அசையாச் சொத்துக்கள் சோதனைகள் விலகி புரிப்பினை ஏற்படுத்தும் காலமாகும். உடல் நலம் சிறப்பாக அமையும். மனைவி வழியில் நிலவிய கோளாறுகள் யாவும் விலகி குழந்தைப் பாக்கியம் அமையும். மங்களகரமான திருமண சுபகாரியம் கைகூடும் பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப வாழ்வில் அமைதி தவளும். கணவன் மனைவி ஒற்றுமையுடன் செயறபடுவார்கள்.

மருத்துவ செலவுஇல்லாத காலம் இது. பிள்ளைகளால் உதவியும் அனுகூலமும் பெறுவீர்கள். கமிஷன் ஏஜென்ஸி கான்டிராக்ட் தொழில் வியாபாரம் கூட்டுத் தொழில் போன்றவற்றில் பிரமாதமான அபிவிருத்தியும் இலாபமும் அமையும். நல்ல கூட்டாளிகள் சேருவார்கள். உத்தியோக ரீதியாக மேலதிகாரிகளின் கவனத்தைக் கவர்ந்து விடுவீர்கள். பதவி ஊதிய உயர்வுகளும் சிறப்பாக அமையும். புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை அமையும். விவசாயம் நல்வி விளைச்சலைத் தரும்.

**அதிர்ஷ்ட குறிப்புகள**

அதிர்ஷ்ட கிழமை: வியாழன், வெள்ளி
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், பொன்நிறம்
அதிர்ஷ்ட தெய்வம்: தட்சணாமூர்த்தி
அதிர்ஷ்ட திசை: வடகிழக்கு
அதிர்ஷ்ட கல்: புஷ்பராகம்

(தொடரும்)




# ஆணைவிட அதிக சக்தி கொண்டவள் பெண்!

பெண் என்றாலே 'வீக்கர் செக்ஸ்' என்று கூறுவர். ஆனால், உண்மை என்ன தெரியுமா? அதை அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள். பொதுவாக பெண்ணின் கருவறையில் 100 பெண் சிசுக்கள் உருவாகும் போது 140 ஆண் குழந்தைகள் உருவாகின்றன.

அதாவது, கருத்தோன்றல் விகிதம் என்பது பெண் இனத்தை விட 11/2 மடங்கு அதிக அளவில் ஆண் இனம் தோன்றுகிறது. ஆனால் நல்ல முறையில குழந்தைகள் பிறக்கும்போது 100 பெண குழந்தைக்கு 106 ஆண் குழந்தைகள்தான் பிறக்கின்றன.

கரு தோன்றியபடி பார்த்தால் 34 ஆண் குழந்தைகள் கருவிலேயே அழிந்து விடுகின்றன. ஆனால், 100க்கு ஒரு பெண குழந்தை கூட கருவிலேயே அழிவதில்லை. கருவில் வாழும் போதே ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகள் மிகவும் பலமாக இருக்கின்றன என்பதில் சந்தேகமே இல்லை.

அதுமட்டுமா? பிறந்த குழந்தைகளுக்கு 6 மாதம் வரை தொற்றுநோய்கள் சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும். இவற்றால் நறையக் குழந்தைகள் இறக்கும். இதிலும் 100 குழந்தைகளில் 17 ஆண் குழந்தைகளும், 11 பெண் குழந்தைகளும் இறக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

தாயின் கர்ப்ப காலத்தில் ஏற்படும் அதிர்ச்சிகள், நோய்கள், தீய உணவுப் பண்டங்கள், மருந்துகள் உண்பதன் விளைவால் ஊனமுடைய குழந்தைகள் பிறக்கின்றன. இவற்றாலும் 100க்கு 70 ஆண் குழந்தைகளும், 30 பெண் குழந்தைகளும் பாதிக்கப்படுவதாக உலக நாடுகள் கூறகின்றன. இதிலும் பெரும்பாலான பெண் குழந்தைகள் தப்புகின்றன. அதேபோல் பாதுகாப்பு ஹோர்மோன்களும் நோய் எதிர்ப்புச் சக்தியும் பெண்களின் இரத்தத்தில் அதிக அளவில் இருக்கின்றன என்பது ஒரு ஆச்சரியமான உண்மை.

பெண் குழந்தைகள் XX என்ற மரபு அணுக்கள் மூலமும் ஆண் குழந்தைகள் XY என்ற கருக்கூறு மூலமும் உருவாகின்றன. X என்ற கூறு மிகவும் திடமான குழந்தைகளை உருவாக்கும். ஆணுக்கு ஒரு X கிடைப்பதால் இதிலும் பிரச்சினை.

'ஹீமோபைலியா ஜிடென்டரஸ்' என்ற ஹோர்மோன் தற்காப்பு சக்தியை அதிகம் உண்டாக்குகிறது. இது கருவுற்ற தாயின் உடலில் இருந்து பெண குழந்தையாக இருந்தால் மட்டுமே அக்குழந்தைக்கு பாய்கிறது. ஆணாக இருந்தால் பாய்வதில்லை. இதன் காரணத்தை வஞ்ஞானிகளால் அறியவே முடியவில்லை. இதனால் பெண் குழந்தைகள் ஓரளவு நோய் எதிர்ப்புகளைச் சமாளித்து கருவலேயே பிழைத்து விடுகின்றன.

தறபோது ஒரு பெண் ஆணைவிட எட்டு ஆண்டுகள் அதிகமாக உயிர் வாழ்கிறாள். இதற்கு பெண்ணிடம் காணப்படும் 'ஈஸ்டிரோஜின்' ஆண் இன 'டெஸ்டிரோஜனை' விட அதிக எதிர்ப்பு சக்தி வாய்ந்ததாக இருப்பது தான் காரணம்.

'டெஸ்டிரோஜன்' ஆண்களுக்கு நல்ல வலிமையை ஊட்டினாலும் இதயத்திற்கு வந்து



போகும் அனைத்து இரத்தக் குழாய்களிலும் அடைப்பானை உண்டாக்கும் ஒரு பொருளை உண்டாக்குகிறது.

எச்.டி.எஸ். என்ற புரதம் கொழுப்பு பொருட்களைக் கட்டுப்படுத்தி இரத்தக் குழாய்களில் ஏறபடும் அடைப்புகளை சரி செய்து கல்லீரலை நல்ல நிலையில் வைக்கும்.

இந்தப் புரதத்தை உண்டாக்கும் சக்தி டெஸ்டிரோஜனுக்கு இல்லை.

மாறாக ஈஸ்டிரோஜினுக்கு உண்டு. இதனால்தான் மாரடைப்பு ஆண்களுக்கே அதிக அளவில் உண்டாகிறது. பெண்களுக்குக் குறைவு.

பெண்கள் வீக்கானவர்கள் என்று யார் சொன்னது? உண்மையிலேயே அதிக சக்தி உடையவள் பெண்தான். இதனால்தான பெண்களை சக்தி என்று கூறுகன்றனரோ நம் முன்னோர்கள்?

## சமைத்துச் சுவைப்போம்

### மரக்கறி ஜூஸ்



**தேவையான பொருட்கள்:**


நீற்றுப் பூசணி - **400g**
கரட் - **250g**
பீற்றூட் - **50g**
பெரிய வெள்ளரிக்காய் - **300g**
இஞ்சி - **1/2** அங்குலத்துண்டு (தோல் நீக்கியது)
தக்காளி - **100g**
தூளாக்கிய சீனி அல்லது தேன் - சுவைக்கேற்ப
உப்பு - 2 சிட்டிகை
எலுமிச்சைச் சாறு - 1 தேக்கரண்டி

***செய்முறை:***

வெதுவெதுப்பான நீரில் மரக்கறிகளைக் கழுவிக் கொள்ளுங்கள். நீற்றுப் பூசணிக்காய், பீற்றூட், கரட் ஆகியவற்றின் மேல் தோலை அகற்றவும்.

வெள்ளரிக்காயை பெரிய துண்டுகளாக (கசப்பில்லாமல் இருக்க வேண்டும்) வெட்டவும். மிக்சியில் முதலில் இஞ்சி அடுத்து கரட், பீற்றூட் என்ற வரிசையில் ஒவ்வொனறாக போட்டு கூழாக்கி இந்தச் சாறுடன் உப்பு, எலுமிச்சைச் சாறு, சீனி அல்லது தேன் கலந்து பரிமாறவும்.

## உணவின் மிகச் சிறந்த பயனைப் பெறுங்கள்



* உணவு சமைக்கும் இடத்தையும் பாத்திரங்களையும் உணவு சமைப்பதற்கு முன்பும் பின்பும் நன்கு சுத்தம் செய்ய வேண்டும்.

* எல்லா சமையல் பாத்திரங்களையும் சுத்தமான வெந்நீரில் ஒவ்வொரு வேளை சாப்பாட்டுக்குப் பிறகும் சவர்க்காரம் உபயோகித்து தேய்த்துக் கழுவுங்கள். பிறகு சுத்தமான தண்ணீரில் அவற்றை அலசுங்கள். கழுவி அலம்பும் தண்ணீரை அடிக்கடி மாற்றுங்கள்.

* சமைப்பதற்கும், கழுவுவதற்கும் பயன்படுத்தப்படும் தண்ணீர் பாதுகாப்பான இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட நன்னீராக இருக்க வேண்டும்.

* உணவைச் சமைப்பதற்கு முன்பும், உண்பதற்கு முன்பும் உங்கள் கைகளை சவர்க்காரம் போட்டுத் தேய்த்து சுத்தமான நீரில் கழுவுங்கள்.

* சமைக்கும் இடத்தில் உணவுத் துணுக்குகள் சிதறிக் கிடக்கக்கூடாது. உணவுப் பொருட்களுக்கு அருகில் இருமுவதையோ, தும்முவதையோ தவிர்க்க வேண்டும்.

* உணவு சமைக்கும் போது மூக்கு, வாய், தலைமுடி ஆகியவற்றைத் தொடுவதை தவிருங்கள். நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால் அல்லது உங்கள் கைகளில் அல்லது ஏதேனும் வெட்டுக்காயம், புண் இருந்தால் மற்றவர்களுக்காக நீங்கள் உணவு சமைக்காமல் இருப்பது நல்லது.

* அபபடியே சமைக்கவேண்டி இருந்தால் சுத்தமாக இருக்கக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

* உணவுப் பொருட்களை எப்போதும் மூடிவையுங்கள்.

* சமைக்கும் போது உணவை முழுமையாகச் சூடாக்குங்கள்.

* சாப்பிடும் வரை சூடான உணவு சூடாகவும், குளிர்ச்சியான உணவு குளிர்ச்சியாகவும் இருக்கட்டும்.

## அழகுக் குறிப்புகள்



▶கொண்டைக் கடலை மாவுடன் சிறிது பாலும், எலுமிச்சம் பழச்சாறும் கலந்து முகத்தில் தடவி வர, முகம் நல்ல சிகப்பழகு பெறும்.

▶துவரம் பருப்பை முதல் நாள் இரவே ஊறவைத்து விடவும். மறுநாள் அதை அரைத்துத் தலையில் தடவி சிறிது நேரம் ஊறிக் குளித்தால் முடி உதிர்வது உடனே கட்டுப்படும்.

▶தினமும் வேலைகள் எல்லாம் முடித்த பிறகு சிறிது சர்க்கரையை எடுத்து உள்ளங்கைகளில் வைத்துக் கரகர வெனத் தேய்த்துக் கழுவவும். தொடர்ந்து இப்படிச் செய்து வர, சொரசொரப்பான கைகள் பட்டுப் போலாகும்.

▶வெந்தயத்தைத் தூளாக்கி அதைத் தேங்காய் எண்ணெயில் ஊறவைத்து அந்த எண்ணெயைத் தினம் தலைக்குத் தேய்த்துவந்தால் முடி வளர்ச்சி அதிகரிக்கும்.

▶ஜாதிக்காயை அரைத்து அத்துடன் கடலை மாவு கலந்து முகத்தில் தடவி அரை மணி நேரம் ஊறிக் கழுவினால் முகத்தில் உள்ள சிறிய வடுக்கள் காணாமல் போகும்.

▶கடுக்காயை விழுதாக அரைத்துக் கொள்ளவும். அதை பொட்டு வைத்ததால் நெற்றியில் அலர்ஜி உண்டான இடத்தில் தடவி வர அது சரியாகி அந்த இடத்துக் கருமை மறையும்.

▶கடலை மாவுடன் தயிர் சேர்த்து முகத்தில் கரும்புள்ளிகள் உள்ள இடங்களில் தடவி, காய்ந்ததும் தேய்த்துக் கழுவிட முகம் பளிச்சென்றாகும்.

## காஸ் சிக்கனத்திற்கு...

காஸ் அடுப்பை உபயோகிப்பவர்கள் காஸை சிக்கனமாக பயன்படுத்தி சமைப்பதற்கு சில எளிய வழிகள்:-

* பாத்திரங்களைத் திறந்துவைத்து சமைப்பதை பெரும்பாலும் தவிருங்கள்.

*சமைப்பதற்கு ஒடுக்கமான பாத்திரங்களுக்குப் பதிலாக அகலமான பாத்திரங்களைப் பயன்படுத்துங்கள்.

*பருப்பு, தானிய வகைகளை சிலமணி நேரத்திற்கு முன்பாகவே ஊறவைத்து விடுங்கள். இப்படி ஊறவைத்து சமைக்கின்றபோது 22 சதவிகிதம் காஸ் மிச்சமாகிறது.

*காய்கறிகளை திட்டமிட்டு முன்பே நறுக்கி வைத்துக் கொள்ளுங்கள்.

## வாழ்க்கை வாழ்வதற்கே!

வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களைக் கண்டு சோர்வடைந்து விடாதீர்க்ள. ஏனெனில் இன்னல்களை தாங்கிவரும் வாழ்க்கையே நிரந்தர வெற்றியைத் பெற்றுத்தரக் கூடியது.

வாழ்க்கையில் முடியாது என்று எதனையும் விட்டுவடாதீர்கள. முழு மனதுடன் போராடுங்கள். ஏனெனில், ஓயாத போராட்டத்தில்தான் நிலையான புகழ் கிடைக்கும்.

பிறரின் வாழ்க்கையைப் பார்த்து தனக்கு இதுபோன்று ஒரு வாழ்க்கை அமையவில்லையே என்று ஆதங்கப்படாதீர்கள். ஏனெனில, நம்முடைய வாழ்க்கையை விட மற்றவர்களுடைய வாழ்க்கை அகத்தினில் நிம்மதி அற்றதாக இருக்கும்.

எடுத்ததற்கு எல்லாம் வாழ்க்கையை வெறுக்காதீர்கள். ஏனெனில், நம் வாழ்க்கையின் எதிரியே நாமாகிவிடுவோம்.

தோல்விகளைக் கண்டு தோள் வலிமையை இழந்து விடாதீர்கள். ஏனெனில், அவமானங்கள் இல்லாமல் வெகுமானங்கள் இல்லை.

## பூனை நாய் வளர்த்தால்...

நாய், பூனை போன்ற செல்லப் பிராணிகளை வளர்க்கும் வீடுகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக இருப்பதாக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

5 முதல் 8 வயது உள்ள 138 சிறுவர்களின் எச்சிலை டாக்டர்கள் சோதித்தபோது, செல்லப்பிராணிகள் வளர்க்கப்படும வீடுகளைச சேர்ந்த சிறுவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதன்மூலம் நோய்கள தொற்றிக் கொள்ளாமல் தடுக்கமுடியும்.

செல்லப்பிராணிகள் வளர்க்கப்படும் வீடுகளில் நோய்தொற்றுக்கு வாய்ப்புகள் அதிகம். அதனால் நோய் எதிர்ப்பு சக்திக்கு வேலையும் அதிகம். எனவே அந்த சக்தி சிறப்பாகச் செயல்படுகிறது என்று வார்விக் பல்கலைக்கழகம் பேராசிரியா டாகடர் ஜூனே மெக்நிகோலஸ் தெரிவித்தார்.

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 58



ரயில் கர்ஜனை செய்துகொண்டு ஓடத தொடங்கியது. அந்த ரயில் 100மைல் கடந்து தான் நிற்கும். ரயில் புறப்பட்டவுடன் சாமான்களைச் சீற்றுக்கு அடியில் வைக்கலாம் என்று சீற்றுக் கடியில் கண்ணைச் செலுத்தினேன். சீற்றுக்கடியில் காக்கிச் சட்டையணிந்த கள்ளன் ஒருவன் நீண்ட கத்தியுடன் படுத்துக் கொண்டிருந்தான். அவனைக் கண்டவுடன் நான் நடுநடுங்கினேன். தலை சுற்றியது, நம் வாழ்நாள் முற்றியது என்று கதிகலங்கி நின்றேன். ஆனால் என் மதி மட்டும் கலங்கவில்லை.

நான் முருகப் பெருமானை வழிபடுகின்றவள். முருகனை மனதில நினைத்தேன். வானத்தில் மின்னல் தோன்றியது போல் என் மனதில் திடீரென ஒரு சமயோசித புத்தி தோன்றியது.

நான் குழந்தைகளைப் பார்த்து "என்ன ஒண்ணுக்கு வருகிறதா? பாத்ருமிற்குப போங்கள்" என்றுகூறி அவர்களை பாத்ருமிற்கு அனுப்பி நானும் பாத்ருமில் நுழைந்து கதவைச் சாத்தித் தாளிட்டுக்கொண்டு அபாய சங்கிலியை இழுத்தேன். ரயில் நின்றது. ரயில்வே கார்டு இரண்டு காவல் துணையுடன் வந்தார். கூட்டமும் கூடியது. நான் கதவைத் திறந்து வெளியே வந்து காவல் துறையினரை அழைத்து சீற்றுக்கடியில் உள்ள கள்வனைக் காட்டினேன். காவல் துறையினர் அவன் கையில் விலங்குபோட்டு அழைத்துச் சென்றார்கள். இவ்வாறு செய்யவில்லையானால் குழந்தைகளுடன நான் அன்று அந்தக கள்வனால் மாண்டிருபபேன். முருகப் பெருமான் எனக்கு அந்த வேளையில் அந்த புத்தியைக் கொடுத்தார். எல்லாம் அவனுடைய கருணை. என் உடல், பொருள், ஆவி அனைத்தும் முருகனுடைய உடமைகளே யாகும்" என்று கூறினார். இந்த நிகழ்ச்சியைக்கேட்டு நான் அதிசயம் அடைந்தேன். பெண்ணறிவு நுண்ணறிவு என்று எண்ணி வியந்தேன்.

## அரிய நண்பர்

ஒரு சமயம் சுசீந்திரத்திற்கு அங்கு நடைபெறும் திருவிழாவின்போது விரிவுரை புரியச் சென்றிருந்தேன். நாகர்கோயில் பெரிய தொழிலதிபரும், கர்மயோகியும், கோடீஸ்வரரும் ஆகிய பயோனியர்குமாரசுவாமி அவர்கள் விரிவுரைக்கு வந்திருந்தார். விரிவுரை முடிந்தபின் அவரது திருமாளிகைக்கு என்னை அழைத்துக்கொண்டு சென்றார். அவருக்கு ஆண் சந்ததி இல்லை. நான்கு புதல்வியர் இருந்தனர். அந்த நான்கு புதல்வியரையும் அழைத்து "நான் உங்களுக்கு அப்பா அன்று; வாரியார் சுவாமிதான் உங்களுக்குத் தந்தை" என்று கூறி என்னை ஆசனத்தில் இருக்கவைத்து, அவர்கள் நால்வரையும் எனக்குச் சிற்றுண்டி படைக்குமாறு செய்தார்.

மறுநாள் அவர்களுக்கு என்னை அறிவுரை கூறுமாறு செய்தார். அன்றிரவு திருநெல்வேலியில் 2மணி ரயிலில் நான் புறப்பட வேண்டியதாக இருநதது. தன்னுடைய டிரைவரை அழைத்து "குற்றாலம்! நமது காரில் சுவாமிகளைக் கூட்டிப்போய் திருநெல்வேலி சந்திப்பில் விட்டுவிட்டு வா!" என்று கட்டளையிட்டார்.

அவரிடம் விடைபெற்றுக்கொண்டு காரில் சென்று திருநெல்வேலியில் ரயில் ஏறிச்சென்றேன். அடுத்த ஆண்டு சுசீந்திரத்திற்கு விரிவுரை செய்யச்சென்றேன். அப்போது பயோனியர் குமாரசுவாமியுடைய இல்லத்தில் தங்கியிருந்தேன். விரிவுரை முடிந்தபின் குமாரசுவாமியவர்கள் என்னைப்பார்த்து "சுவாமி! இன்று இரவே போகவேண்டுமா?" என்று கேட்டார். "அவசரம் இல்லை. நாளை போகிறேன்" என்றேன். அப்பொழுது என் உள்ளத்தை உருக்கும் சில வார்த்தைகளைக கூறினார்.

'சுவாமி! சென்றமுறை தாங்கள் இரவே திருநெல்வேலிக்குப் புறப்பட்டீர்கள். என்னுடைய காரைக்கொடுத்து என்னுடைய டிரைவர் குற்றாலலிங்கத்தை அனுப்பினேன். என்ன இருந்தாலும் என் டிரைவரும் மனிதன்தானே? தூக்கம்யாரையும் ஏமாற்றும். தாங்கள் தமிழ் நாட்டுப் பொது உடைமை. தங்களுக்கு ஒன்று வந்தால் அது தமிழகத்திற்கு வந்த பெரு நஷ்டமாகும். ஆதலால் என்னுடைய டிரைவர் குற்றாலலிங்கத்தைப் பார்த்து, "குற்றாலம்! சுவாமியைக் கூட்டிப்போய் ரயிலேற்றிவிட்டு எனக்குப் போன் பண்ணு; உன்னுடைய போன் வந்த பிற்பாடுதான் நான் படுப்பேன் என்று கூறினேன். அவன் தங்களை ரயிலேற்றிவிட்டுப் போன் செய்யும் வரை நான் போன் அருகிலேயே அமர்ந்திருந்தேன். அவனிடமிருந்து போன்வந்த பிற்பாடு நான் நிம்மதியாகப் படுத்துக்கொண்டேன். ஆதலால் தாங்கள் இரவில் பிரயாணம் செய்யாமலிருப்பது நல்லது" என்று கூறினார்.

நான் அவருடைய அன்பின் ஆழத்தை நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்தேன். காரைக் கொடுக்கலாம். டிரைவரை அனுப்பலாம். ரயில் ஏறிய பின் போன் வரும்வரை ஒரு கோடீஸ்வரன் கண் விழித்துக்கொண்டிருப்பது என்பது அரிதிலும் அரிது.

பின்னர் நான் நாகர்கோயிலுக்கருகிலுள்ள ஊர்களுக்கு விரிவுரை செய்யப் போகும்பொழுதெல்லாம் அவருடைய அன்புக் கடலில் முழ்குவேன்.

## டிரைவரின் அன்பு

மேலே குறிப்பிட்ட பயோனியர் குமாரசுவாமியவர்கள் வயிற்றில் நோய்வந்து வேலூர் அமெரிக்கன் மருத்துவ மனையில் முருகனடி சேர்ந்தார். கார் டிக்கியில் ஒரு பெருந்தொகை இருந்தது. அது இருக்கும் தன்மை மூன்று பேருக்குத்தான் தெரியும்.

ஒன்று பயோனியர் குமாரசுவாமி, இரண்டாவது டிரைவர், மூன்றாவது கடவுள், பணம் யாரையும் மயக்கும், கொலை செய்யவும் தூண்டும். குமாரசுவாமியின் பூதவுடல் காரில் நாகர் கோவில் சேர்ந்தது. குமாரசுவாமியினுடைய குடும்பம் பாகம் பிரியாதது. டிக்கியிலிருந்த அத் தொகையை டிரைவர் குற்றாலம், தான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணாமல் நாகர்கோவிலில் உள்ள காங்கிரஸ் தலைவர் நேசமணி அவர்கள் கையில் கொடுத்து "இது முதலாளி பணம் அவர்களின் உப்பும் சோறும் உண்டு வளர்ந்தவன். முதலாளிக்கு நான் துரோகம் செய்யக் கூடாது. இந்தப் பணத்தை முதலாளி குடும்பத்தினரிடம் சேர்க்க வேண்டியது" என்று கூறிப் பணத்தை அவரிடம் ஒப்படைத்தார். அப்பெருந்தொகை ஒரு ஏழை டிரைவரை மயக்கவில்லை. அந்த டிரைவரின் பண்பு எத்தனை உயர்ந்தது, என்பதை உய்த்துணர்வார் உணர்வார்கள்.

நாகர்கோவிலில் அன்பு வடிவாகிய மீ.பாலசுப்பிரமணியம் அவர்கள், பூதப்பாண்டி தங்கவேல் பாகவதர் அவர்கள், கோட்டாறு சுப்ரமண்ய மூப்பனார் என்ற அன்பர்கள் எப்பொழுதும் என்னிடம் அன்பாகப் பழகுவார்கள்.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## படுகாயம்

(மன்னார்)

மன்னார் எழுத்தூர் தாராபுரம் பகுதியில மிதிவெடியில் சிக்கி ஒருவா தனது வலது காலில் படுகாயத்திற்குள்ளாகியுள்ளார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை தாராபுரம் காட்டுப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர் கண்டியைச் சேர்ந்த 32வயதுடைய ஜோய் என அறியப்பட்டுள்ளது. உறவினர் வீட்டில தங்கியுள்ள இவர் விறகுவெட்டச்சென்றபோதே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது சம்பவம் நடந்த பகுதியில் கடற்படையினர் நிலைகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## பாராட்டுவிழா

(மருதங்கேணி)

வடமராடசி கிழக்கு நாகர் கோவில் மேற்கு கிராம சேவையாளராக கடநத 14 வருடங்கள் சேவை புரிந்து குடத்தனைக்கு மாற்றலாகி சென்ற வி.தர்மகுலசிங்கத்துக்கு நாகர் கோவில் மக்களால் கற்கோவளத்தில் நாகர் கோவில் கடற்றொழில் சங்க தலைவர் க.குமரேசு தலைமையில் பாராட்டுவிழாவும், பிரிவுபசார விழாவும் சென்ற வெள்ளிக்கிழமை நடாத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரீ. ஜெயசீலன் மற்றும் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ஆகியோர் இவரின் சேவையைப்பாராட்டி வாழ்த்துரை வழங்கினர். (அ-35)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வா சுவாமி கோவில் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் வாராந்த ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00மணிக்கு பூசையினைத் தொடர்ந்து "பகவத் கீதை" என்னும் பொருள்பற்றி ஆசிரியர் எஸ்.செல்வறமணன் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (அ-35)

## பிரம்மோற்சவப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு வீரமுனை ஸ்ரீசிந தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய பிரம்மோற்சவப் பெருவிழா நாளை மறுதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ற-2)

## இன்பச்சோலை வீதியின் நிலை

(பொன்னாலை)

வட்டு.தெற்கு இன்பச்சோலை வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாததால் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கிறது. இதனால் இவ் வீதி மாரி காலங்களில் இவ் வீதி வழியே போக்குவரத்துச்செய்ய முடியாதிருப்பதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள்.

சம்பந்தப்பட்டவர்கள் இவ் வீதியை நிறுவுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (து-49)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு சிறுப்புலம் ஸ்ரீசிவ சுப்பிரமணியா ஆலய புனராவர்த்தன பஞ்ச குணடபக்ஷ பிரதிஸ்டா மகா குமபாபிஷேக பெருவிழா எதிர் வரும் 11ந் திகதி திங்கட்கிழமை காலை 9.30மணிமுதல் 10.30மணி வரை நடைபெறவுள்ளது.

மேலும் தொடர்ந்து 12நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளதால் பங்கேற்க விரும்பும் அடியார்கள் ஆலய தர்மகர்த்தாவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (அ-7)

## செயற்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பருததித்துறை பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை 11.00மணிக்கு பிரதேச செயலாளர் வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு திணைக்கழத் தலைவர்களை தவறாது சமூகம் தருமாறு பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (அ-52)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாறு சந்நிதியான் ஆசசிரம சைவக்கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவையின தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் நடைபெற்று வரும் சொற்பொழிவுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை சமய சமூக சேவையாளா ஆசிரியர் இரா.செல்வவடிவேல "மந்திரங்கள்" என்ற தலைப்பில் சமயச சொற்பொழிவாற்றவுள்ளார்.

இந்நிகழ்வில் அறிமுகவுரையை இளைப்பாறிய அரச ஊழியர் சமூக மணி சி.சி.நடராசாவும் நன்றியுரையை, பேரவையின கௌரவ, பொதுச் செயலாளர் ந.அரியரத்தினமும் நிகழ்த்தவுள்ளனர். (அ-9)

## மின்சாரம் விரைவில்

(அம்பன்)

வடமராட்சி கிழக்கு மணற்காடு குடத்தனை, குடத்தனை மத்தி பொற்பதி ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்காக மின் கம்பங்கள் நடப்பட்டு கேபிள்கள் பொருத்தப்படுகின்றது. இப்பகுதிகளுக்கான மின்சாரம் விரைவில் வழங்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது. (அ-56)

## தேர்வுக்குக் காத்திருப்பு

(பொன்னாலை)

யாழ்.பல்கலைக்கழக 2002/2003ஆம் ஆண்டு வெளிவாரிப்பட்டப்படிப்பு மாணவர்களின் முதற் கலைத்தேர்வுப் பரீட்சை நீண்ட நாட்களாகியும் இன்னமும் நடைபெறாதிருப்பதால் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்கள் பெரும் விசனமடைகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சைகளை நடத்துவதில் ஏற்படுகின்ற தாமதங்களால், காலங்கள், கற்பவர் மனநிலை, தொடர் கல்வி, வேலைவாய்ப்பு எனப் பல பிரச்சினை ஏற்படுவதாக காத்திருக்கும் மாணவர் தெரிவித்துள்ளனர். (அ-49)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி டிப்ளோமா 2ஆம் வருடத்திற்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது என சிரேஷ்ட விரிவுரையாளரும் பிராந்திய இணைப்பாளருமான திருமதி த.வில்வநாதன் அறிவித்துள்ளார். (அ)

## கொடுப்பனவு

"யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான ஆனி மாதக் கொடுபபனவு எதிர்வரும் 9ஆம் திகதி அன்று வழங்கப்படுமென பீடாதிபதி அறிவித்துள்ளார்." (அ)

## தாச்சி சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்ட தாச்சிச்சங்கம் மற்றும் விளையாட்டுத்துறை ஆகியோரின் அனுசரணையுடன் கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் நடாத்திவரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில்,

இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கைதடி வளர்மதி அணியை எதிர்த்து சுன்னாகம் கலைவாணி அணி மோதவுள்ளது. (அ-9)

# என்ன செய்வது....?

## சிறுகதை

வ.வே. கிருபதாசன்
நெற்கொழு.





வயதும் இருபத்தாறு ஆக' விட்டது. இப்ப எல்லாம் முன் போல எதுவுமே இல்லை. வீட்டிலும் சரி, றோட்டிலும் சரி ஏதோ விசேட ஜந்துவைப் பார்ப்பது போல பார்க்கிறார்கள். உந்த சனங்கள் இப்படித் தானென்றால் கூடித் திரிந்தவர்கள் கூட வித்தியாசமாகத் தானே போய்விட்டார்கள்! எனக்கு இன்னும் விளங்காமல் இருப்பது இந்தவொன்று தான். அவர்கள் வித்தியாசமாகப் போய்விட்டார்களா? இல்லை நான் வித்தியாசமாகப் போய் விட்டேனோ?

என்னதான் இருந்தாலும் அப்ப பதினாறு வயதில இருந்ததே ஒரு மவுசு சா... இனிக் கிடைக்குமா? ஏதோ அப்ப நான் படிச்சு இஞ்சினியராகவோ டொக்டராகவோ வருவன் என்று நினைச்சாக்கும் பாடம் விட்டு வீட்ட வந்தா தேத்தண்ணி, படம் பார்க்கப் போய் வந்தா தேத்தண்ணி... என்ன மாதிரி போச்சுது அந்தக்காலம். என்ன இப்பவும் எனக்கென்றொரு தனிமவுசு இருக்கத்தான் செய்யுது. ஆனால் வடிவம் கொஞ்சம் மாறிவிட்டது.

விடியுதோ இல்லையோ அப்பரின் கண்கள் விரியும். 'என்னவாம்? இப்படியே... வயதும் 26 தொடர்ந்தும் என்ர உழைப்பில்...?' வாயாலை கேட்டால் தாங்கலாம். உந்த மனிசன் கண்ணாலே கேட்குமே கடவுளே! அந்த வேதனையை யாருக்குச் சொல்வது?

என்னை பார்த்து விட்ட தோடு சரியென்று பார்த்தால், அப்படி எட்டி தங்கைக்கு காட்டும் உங்கள் கொன்னரைப் பார். நல்ல பிறவி படுக்கை, எழும்பல், திரும்ப ஊர் சுற்றல், சாப்பாடு... கொடுத்து வைச்சவன் என்ற மாதிரி காட்டும்.

பத்தாததிற்கு 8.30 மணியாகவிட்டால் பெரிய தொல்லை. அம்மாவிற்கு ஒன்றுக்கு பத்து தரம் 'நான் வேலைக்குப் போற னப்பா.. நான் வேலைக்குப் போறனப்பா..' என்று குத்திக் காட்டல. யாரோ கேட்டனையோ? நீங்கள் எங்கை போறீங்கள் என்று சும்மா என்னைக் குத்திக் காட்ட. என்னசெய்வது? இன்னும் எவ்வளவு நாளுக்கு பாப்பம். எனக்கும் காலம் மாறத் தானே ஆகவேண்டும்.

ஏதோ நான் சந்தோசமாக இருந்து திண்டு குடிப்பதாக எல்லோரும் நினைக்கிறார்கள். எல்லோருமென்றால் வீட்டில்... றோட்டில்... கடையில் கட்டில் இவர்களுக்கெங்கே தெரியப்போகுது என் கஷ்டம்? சாப்பிட இருந்தால் உப்பில்லாவிட்டாலும் சாபபாட்டாக வேண்டும். மறந்தும் சாப்பாட்டில் உப்பில்லையே என்று சொன்னால் போதும் 'உழைக்கத் துப்பில்லை. உப்பு போட்ட சாப்பாடும் கேட்குதோ' என்று அனுகுண்டை விட வேகமாய் அப்பரின் நாக்குண்டு வந்து தாக்கும். அதனால என்னவோ ஏதோ இருக்கிறத கொட்டிக் கொள்ளுறது.

அதுவும் இரவென்றால் கேட்கவும் வேண்டாம். சாப்பிடவென பத்து மணியளவில் குசினிக்குள் நுழைந்தால் சோறு தண்ணியா மிதக்கும். கறியெல்லாம் ஒரு சட்டியில் சேர்ந்து கொதிக்கும். என்னவோ ஏதோ குளிருதோ சுடு குதா கண்ணை மூடிக்கொண்டு இறுக்க வேண்டியதே. இல்லாவிட்டால் ராப்பட்டினிதான்.

அப்பர் இல்லாவிட்டா அம்மா கொஞ்சம் கவனிப்பா. அதிலும் அவவின் அட்வைஸ்... அதுதான் புத்திமதி தாங்கமுடியாது. நான் ஏதோ வேலை கிடக்க போகர்மல் படுத்துக் கிடப்பது போலவும் போய் செய்து வரலாம் என்றும். தொடர்ந்து கொப்பர் உன்ர நன்மைக்குத்தானே சொல்கிறார் என்று முடியும். சாப்பிட்டது என்ன வென்றே மறந்துபோகும். இதை விட அவவிடம் அகப்படாமல் இருந்தாலே போதும்.

என்ன செய்வது. எனக்கும் கவலைதான். ஏதாவது செய்து வீட்டுக்கு கொஞ்ச காசேனும் கொடுத்து வந்தால் நிம்மதியாக இருக்கலாம். என்ர பாட்டையும் பார்க்கலாம். இது இப்ப கடையில் தேத்தண்ணி குடிக்கிலும் 5 ரூபா வீட்டதான் வேண்ட வேண்டும். படிக்கும் போது கஷ்டப்பட்டு படிக்காமல் இபப அதை நினைப்பதிலேயே விசர் வந்துவிடும். கடை கிடை போட்டோ இல்லை வானை, ஆட்டோவை எடுத்தோ உழைக்கலாமெண்டால் முதல் என்று போட காசுமில்லை. நம்பிக் கடன்தர ஆளுமில்லை. ஏதாகிலும் செய்ய வேண்டும். காசு கையில் வரவேண்டும் என்று நினைத்து நினைத்தே பொழுது ஓடிவிடும்.

வீட்டில இருக்கத்தானே உந்த யோசனை வருதென்று மதவடிப்பக்கம் போனால்... அது பெரிய அவஸ்தை. பள்ளிக் கூடம் விட்டு பெட்டையள் வருவளவை அவர்களையும் பார்க்க முடியுதில்லை. ஏனெண்டால் இப்ப படிக்கிறதுகளுக்கு ஆகக் கூடியது 19 வயதுதான் இருக்கும். பார்க்க தங்கச்சி மாதிரித் தான் கிடக்கும்.

இது என்ன துன்பமடா என்று திரும்பினால் கொண்டை போட்டு சாறியும கட்டிக்கொணடு என்னோட படிச்ச பெட்டையள் சிரித்துவிட்டு போகிறார்கள். அவளவையள் சிரிப்பு இருக்கிறதே சிரிப்பு 'நீ படிக்கேக்கையும் உதிலதானே இருந்தனி. இப்பவும் உதில தானே' என்ற மாதிரி கிடக்கு. உந்த ஆக்கிணையளிலை இருந்து தப்ப மதவடியையும் குறைச்சாச்சு.

உவன்கள் எல்லாம் அது தான் என்ர கூட்டாளிப் பொடியள் கோலிவ்பும், பியரும், பசனுமாகத் திரிகிறார்கள். நான் தான இப்படியே. சவுதி, கட்டாருக்கு பாய்வம் என்று பார்த்தால் விசா என்கிறார்கள், கஷ்டமென்கிறார்கள். கஷ்டத்தைப் பார்த்தால சரிவராது. கஷ்டப்பட்டுத் தான் வாழமுடியுமென்று எழுதியிருந்தால் அப்படித்தானே நடக்கும் என நினைத்து விசாவிற்கு கதைத்தால் 2, 3 தரட்டாம். முதல் நான் ஏதோ 20 ஆயிரமோ, 30 ஆயிரமோ என்றுதான் நினைத்தேன். பிறகுதானே 2,3 எணடது 2 அல்லது 3 லட்சமென்று தெரியும். 2,3 கிடந்தா நானேனிபபடி திரியிறன். ம்... கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிச்சுக் கொண்டு கொடுக்கும் என்பார்கள். சரி, தெய்வம் கூரையைப பிச்சு கஷ்டப்படாமல், பிககிறது கஷ்டமெண்டால், கூரையிலே 'செல்' விழுந்த ஓட்டை கிடக்கு. அதால கெட்டலாம் தானே. தெய்வமும்.. வருகிற விசருக்கு.

வீட்டில் தான் இருக்க ஏலாமல் கிடக்கெண்டு சும்மா லைபிறறிப் பக்கம் போய் வருவமெண்டு வெளிக்கிட்டால் பெரிசுகளின் கதை. 'என்ன மாதிரி மழை வரும் போல' கேட்கும் பெரிசின் முகத்தில் ஓங்கிக் குத்தவேண்டும் போலிருக்கும். இப்ப இவருக்கு உதுதான் முக்கியம். மழை வந்தால் கரைஞ்சு போற கட்டி மாதிரி யோசனையோடு கேள்வி. வந்தா வருகுது வராட்டி போகுது விடவேண்டியதுதானே. சும்மா தொணதொணப்பிற்கு ஒரு கேள்வி. என்ன செய்வது என் தலைவிதியென்று விட்டு பேப்பரை எடுத்தா கட்டாயம் முதல் பார்க்கிறது மணமகன் தேவை பக்கம்தான்.

எதுக்குத் தெரியுமா? ஏதும் கொஞ்சம் காசு பணத்தோட இருந்தால் மாட்டலாமென்றுதான்.

7 இல் செவ்வாய் உள்ள பெண்ணுக்கு மணமகன் தேடுகிறார்கள். வேண்டிய அல்லது கேட்கும் வரதட்சணை கொடுக்கப்படும். இதுதான் என்னைப் பாதிச்ச இடம். உந்த செவ்வாய் கூட என்னைக் கைவிட்டு விட்டதே. ஒரு எட்டு பத்து செவ்வாய் இருந்திருந்தால் நல்ல கொழுப்போட ஒரு பெண்ணை செய்திருக்கலாம். இப்ப என்ன ஆரும் சாத்திரிமாரைப் பிடிச்சு செவ்வாய் குற்றத்தோடு குறிப்பு எழுத முடிந்தால்... ஆரும் சாத்திரியோடு உண்மையிலேயே கதைக்கவேண்டும். ஏறுமாறாக ஆரையும் கேட்டால் அடிச்சுப் போடுவன்கள். என்ன சேட்டையோ என்று! அவன் பாவிக்கு எங்கை விளங்கும் என்ர நிலைமை.

உந்த தெய்வத்திட்ட அது தான் எல்லாவற்றையும் கடந்தவன் அதனால் கடவுள் என்று அழைக்கப்படுகிறான் என்று எல்லோரும் சொல்வார்களே அந்தாளிடம் நான் கேட்டது இந்த ஒன்றைத்தான்; சந்தோசமா இருகக வீடு சரி சந்தோஷத்தை தர முடியாவிட்டால் கவலைகளையாவது தராமல் இரு என்று தான். வரவர அந்தாளின் கவனிப்பும் குறையுது.

இதையெல்லாம் சேர்த்துப் பார்த்தா இப்ப இருக்கிறது இரண்டு வழி. ஒன்று தற்கொலை, மற்றது நல்ல பெருங் குடிமகனாக மாறுவது எதைச் செய்வது? தற்கொலை கேவலம் மரியாதை இல்லை. கை, கால் இல்லாதவன் மாதிரி சீ... உது வேண்டாம் என மனம் சொல்ல, அப்ப குடிமட்டும் நல்லமாக்கும். அது மரியாதையாக்கும். கேவலமில்லையாக்கும் எனறு இதயம் எழுப்பி எழும்பித் துள்ளும். இதனால நான் இரண்டாகிப் போன தென்னவோதான் நடந்து முடிந்தது.

இடைக்கிடை மூளை தட்டி வைக்கும். இரண்டு பேரும் பேசாமல் இருங்கள். இல்லாட்டி நான் என்ர வேலையைக் காட்டுவன் என்று. மனமும் சரி இதயமும் சரி உடனே கப்சிப் ஆகிவிடும்.

இப்ப என்ன செய்வது...? உங்களோடை கதைத்ததை எப்படி முடிக்கிறதெண்டு தெரியாமல் திண்டாடுவது போலதான எனர வாழ்க்கையை எப்படி தொடருவது என்று திண்டாடுகிறேன்? ஆரும் வழி தெரிந்தால் உதவி செய்யுங்களேன்.

---

## க.பொ.த (சா/த) பரீட்சையில்

# அதியுயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள்

(யாழ்ப்பாணம்)

2005 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு யாழ்.மாவட்ட கல்விக்கழகத்தினால் பரிசுகள் வழக்கப்படவுள்ளன.

இப்பரிசளிப்பு விழா ஒன்றை நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். கல்வி வலயமாநாட்டு மண்டபத்தில நடைபெறவுள்ளது. (ற-19)

# பொதுக்கட்டமைப்புக்கு கல்வியாளர்கள் பாராட்டு

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஏற்படுத்தியுள்ள சுனாமிக்குப் பின்னரான பொதுக்கட்டமைப்பு சமாதான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்ல வாய்ப்பு ஏற்படுத்தியுள்ளதாக யாழ் மாவட்ட கல்வியாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதால் நீண்டகால்மாக இடம்பெற்று வந்த யுத்தம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டமை மற்றுமொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை ஏற்படுத்தியிருப்பதாக யாழ. மாவட்ட கல்விமான்கள் மேலும் தெரிவித்துள்ளார்கள்.

அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகளை விரைவாக ஆரம்பித்து இலங்கையில் சுபீட்சத்தை விரைவில் ஏற்படுத்துமாறும அவர்கள் வேண்டியுள்ளனர். (து-2)

# பயிற்சி நிறைவு

(மருதங்கேணி)

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்றுவந்த பரிசாரகருக்கான பயிற்சி முடித்து வெளியேறும் மாணவர்களுக்கான பிரிவு உபசாரவிழா கடந்த 26 ஆம் திகதி அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பிரதி சுகாதார பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இவர்களுக்கு பல அறிவுரைகளை வழங்கினார். (அ-35)

# வீதியைத் திருத்தக் கோரிக்கை

(பொன்னாலை)

தொல்புரம் - முன்கோடை வீதி நீண்டகாலமாக திருத்தப்படாததால குன்றும் குழியுமாகப் போக்குவரத்துக்கு உதவாத நிலையில் காட்சியளிக்கிறது.

இவ்வீதியால் மாரிகாலங்களில மாத்திரமன்றி கோடை காலங்களிலும் போக்குவரத்துச் செய்வது என்பது கடினமாகவேயுள்ளது. வலி-மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இவ் வீதியை உடனடியாக திருத்தியமைத்துத் தர நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(து-49)

# சுனாமியால் முழுமையாக சேதமடைந்த வீடுகள் தலா ரூ.5,40,000 செலவில் மீள நிர்மாணிப்பு

## வடமராட்சியில் திட்டங்களை முன்னெடுக்க இணக்கம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில சுனாமி அனர்த்தத்தினால் பகுதியாகவும் முழுமையாகவும் 5408 வீடுகள் சேதமாகியுள்ளன.

இவ்வாறு சுனாமியினால் இப்பகுதிகளில் முழுமையாக சேதமடைந்த வீடுகளை தலா 5,40,000 ரூபா செலவில் மீள நிர் மாணித்துக்கொடுப்பதற்கு தேசத்தை மீளக் கட்டியெழுப்பும் இயக்கம் (ரவபன) அமைப்பு இணககம் தெரிவித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற ரவ்பன் அமைப்பின் விசேட கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் ரவ்பன அமைப்பின தலைவர் மனோதித்தவெல நீர்வழங்கும் வடிகால் அமைப்புச் சபையின் தலைவர் தெசபாய ஹேவகே, வீடமைப்பிடம் தொடர்புடைய திணைக்கள அதிகாரிகள் பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ரவ்பன் அமைப்பினால் 5,40,000 ரூபா செலவில் கட்டிக்கொடுக்கப்படும் வீடுகள் ஒவ்வொன்றும் 500 சதுர அடி கொண்டதாகவும் வீட்டின் கூரைக்கு ஓடுகள் பொருத்தப்பட்டதாகவும்,மலசலகூடம், மின்சாரம், குடிநீர் போன்ற சகல உட்கட்டுமானங்களை உள்ளடக்கியதாகவும் அமைத்துக் கொடுப்பது என முடிவெடுக்கப்பட்டது.

மேலும் இக் கூட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்துள்ள வர்களுக்கு பணம் வழங்கல் தொடர்பாகவும் சுனாமி அனர்ததத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள பல பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுககு இலகு கடன் முறையில் பணம் வழங்கல தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. (ற-19)

## பொது விளையாட்டு மைதானம்

(தென்மராட்சி)

கைதடி வலயத்தில் 15 கிராம சேவையாளர் பிரிவுகள் இருக்கின்ற போதிலும். கூட இவ் வலயத்திற்கென ஒரு பொது விளையாட்டு மைதானம் இல்லாமல் இருப்பதால் இப் பகுதியில் உள்ள இளைஞர்,யுவதிகளின் விளையாட்டுத்துறை வளர்ச்சியடையாமல் இருந்து வருகின்றது.

இக்குறைபாட்டினை போக்கும் முகமாக இப் பிரதேசத்திற்கென பொதுவான விளையாட்டு மைதானம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சியில் இங்குள்ள பொது அமைப்புகளும் தேசிய எழுச்சிப் பேரவையும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அறியப்படுகின்றது.(து-16)

## வாகன அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பித்து

# பரீட்சைகளுக்குத்தோற்றாதோருக்கு மீண்டும் பரீட்சைக்குச் சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் வாகன அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கு எழுத்துப் பரீட்சை செய்முறைப் பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கென வழங்கப்படுகின்ற திகதிகளில் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகன அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பித்தோருக்கு பரீட்சைக்கென வழங்கப்படுகின்ற திகதிகளில் எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சைகளுக்கு தவறாது தோற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ள அதே நேரம் தோற்றாமல் விடுவதனால் இவ் வேலைகளைச் ஒழுங்கான முறையில் மேற்கொள்ள முடியாமல் உள்ளதாகவும் யாழ். மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 2005ஆம் ஆண்டில் வாகன அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பித்த எழுத்துப்பரீட்சை, செய் முறைப் பரீட் சைகளில தோற்றுவதற்கென வழங்கப்பட்ட திகதிகளில் தோற்றுவதற்கு தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கும் முகமாக மீண்டும் பரீட்சை நடாத்தப்படவுளளது.

இவ்வாறு தவறியவர்கள் மீண்டும் எழுத்துப்பரீட்சை, செய்முறைப் பரீட்சைகளில் தோற்றுவதற்குரிய திகதியினை எதிர்வரும் 5ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் யாழ். மாவட்ட அலுவலகத்தில் வந்துபெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தவறும் பட்சத்தில் அவர்களுடைய விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் எனவும் யாழ். மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ற-19)

## தோட்டப்புறத் தமிழ் பாடசாலைகளின்

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க நடவடிக்கை

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த 3179 பேரை மலையகத்திலுள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளில் ஆசிரியர்களாக சேவையில் இணைத்துக் கொள்ள கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம் இவர்களைத் தெரிவுசெய்ய திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறும். இதற்கமைய ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொளளும் நடவடிக்கைகளை இந்த வருட இறுதிக்குள் மேற்கொள்ள அமைச்சு எதிர்பாத்துள்ளது.

தற்போது தோட்டப்புற தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வேலையற்ற பட்டதாரிகளை மலையகப் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ள மற்றும் கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களை குறிப்பிட்ட பாடசாலை களில் இணைத்துக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன்.

இந்த நடவடிக்கையின் மூலம் மலையக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைத சிறந்த முறையில் நிறைவேற்றிச் செல்ல முடியும் என்று கல்வி அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (ற-9)

# காலாவதியான பொருட்கள் தீக்கிரை

(கோண்டாவில்)

கடந்த சனிக்கிழமை கரலை 10.30 மணியளவில் பலாலி றோட் கோண்டாவிலில் கிழக்குச சந்தியில் உள்ள தனியார் கடைகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கடைகள் யாவும் திடீரென சுகாதாரப்பகுதியினால் சேதனையிடப்பட்டது.இச்சோதனையின் போது பதுக்கி வைக்கப்பட்டிருந்த பால் மா பைக்கற்றுக்கள்,பிஸ்கற் பைக்கற்றுக்கள் கன்டோஸ் பைக்கற்றுக்கள் எண்ணெய் வகைகள் போன்ற பொருட்கள் சுகாதாரப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டன.

இப்பொருட்கள் விற்பனைத் திகதிகள் காலாவதியான பின்னரும் விற்பனை செய்யப்பட்டுவந்தாக தெரியவருகின்றது.

இப்பொருட்கள் யாவும் பொது மக்கள் முன், பறிமுதல் செய்யப்பட்டு தீயிடப்பட்டதாக தெரியவருகின்றது. (அ.130)

# இன ஒற்றுமையின் அவசியம் பற்றி பிரதமர் மஹிந்த

(கொழும்பு)

நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லவேண்டுமாயின் இனங்களுக்கிடையில் ஒற்றுமை அவசியம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் அல்லது வேறு இனங்களுக்கிடையே மோதல் ஏற்படுமாயின் அது நாட்டின் சமாதான நடவடிக்கைகளுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கமபளை நாவலப்பிட்டிய அதிவேக நெடுஞ்சாலை திறப்பு விழாவை முன்னிட்டு கடந்த செவ்வாய்கிழமை இடம்பெற்ற வைபவ மொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தக் கருத்துகளைத் தெரிவித்துள்ளார்.

மக்கள் அதிகளவு எதிர்பார்ப்புகளுடன் ஆட்சியில் அமர்த்திய கூட்டமைப்பு அரசாங்கமானது யார் என்ன கூறிய போதும் ஸ்திரமான நிலையிலேயே இருப்பதாக இங்கு உரையாற்றிய பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பு அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

(து-9)

# பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவாக வேலைநிறுத்தமும் பிரார்த்தனையும்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு ஆதரவு தெரிவித்து இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியினர் வேலை நிறுத்தத்திலும் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

பொதுக்கட்டமைப்பு வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்டு சுனாமியினால் பாதிப்புற்ற மக்கள் மிக விரைவில் மறுவாழ்வு பெற வேண்டும் என பிரார்த்தித்து இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் எஸ். சதாசிவம் மற்றும் முக்கியஸ்தர்கள் கதிர்காமத்தில் நேற்று விசேட வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

நூரலையில் லபுக்கல, கொண்டகல, கம்பலகல, மெளண்டவேர்ணன், போகவத்த, கிளன்லொக், நோவூட், அக்கரபத்தன, டலோஸ் ஆகிய தோட்டங்களிலும் இராகலையில் செற்லேனாட்ஸ், கொனிகார், புறுக்சைட் தோட்டங்களிலும் நானு ஓயா பகுதியில் சமசற், ஈஸ் டோல், தம்பகஸ்தலாவ, வெங்டெஸ் ஆகிய தோட்டங்களில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர் இதே வேளை ஒரு சிலதோட்டங்களில் தொழிலாளர்கள் காலையில் பிரார்த் தனைகளில் ஈடுபட்ட பின் 10 மணிக்கு வேலைக்குச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(அ-7)

# துணவிக் கிராமம் துரித அபிவிருத்தி

(பொன்னாலை)

வட்டு-கிழக்கு துணவிக் கிராமத்தில் நிக்கொட் திட்ட அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வலி-மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள இக்கிராமத்தில் சுமார் 80 மில்லியன் ரூபா பெறுமதியான அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

வீதி அபிவிருத்தி,மின்சாரம்,குடிநீர் விநியோகம்,பொதுமண்டபம், மலசலகூடம் சுழற்சி முறைக்கடன் திட்டம் என்றவாறு அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தற்போது வீதி அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றன.

மேற்படி அபிவிருத்தி வேலைகள் யாவும் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தியாகிவிடும் என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-49)

# ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இநது சமய விவகார அலுவல்கள் திணைக்களததின் யாழ். மாவட்ட அலுவலகம் நடாத்தும் ஆன்மீக நிகழ்வுத் தொடர் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 6.30 மணிக்கு நல்லூா நாவலர் மணிமண்டபத்தில் இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சிரேஷ்ட வகுப்பு மாணவன் தி.சசீபன் "முருக பக்தி" என்னும் விடயம் பற்றி சிறப்புச சொற்பொழிவாற்றவுள்ளார். (அ-9)

# சேது சமுத்திரத் திட்டத்தில் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்பு

## ஆராய வெளிநாட்டு அமைச்சர் தலைமையில் குழு

(கொழும்பு)

சேது சமுத்திரத் திட்டம் தொடர்பான முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராய அமைசசரவையினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளர் நிமாலிஅருணதிலக்க கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சரவையினால் வெளி நாட்டு அமைச்சர் தலைமையிலான பல்துறை சார்ந்த குழுவொன்று நியமிக்கப்பட்டது. இதில் பாதுகாப்பு படை தரப்பினரின் முக்கியஸ்தர்களும் அடங்குவர்.

இந்த குழு சேதுசமுத்திரத்திட்ட பிரதிகூலங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும், அதன் பின் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படும்என தெரிவித்துள்ளார்.(அ-9)

# ஜனாதிபதி தேர்தலைக்கோரி போராட்டம் நடத்தத் திட்டம்

(கொழும்பு)

உடனடி ஜனாதிபதி தேர்தல் ஒன்றைக் கோரி மக்கள் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நாளை நடாத்தவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சியும் பிரதிப் பொதுச் செயலர் திஸ அத்தநாயக்க கருத்துத்தெரிவிக்கையில்,

ஜெனபல மஹிமய என்ற போராட்டத்தினை நாம் நடத்த திட்டமிட்ட காரணம் மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தொடர்ந்து மக்களை ஏமாற்றுகின்றது.

ஆனால் புதிய அரசை தெரிவு செய்து ஜனாதிபதி தேர்தலை நடத்தி நாட்டை நல்வழிப்படுத்துவதே நமது நோக்கம் என தெரிவித்துள்ளார்.

(அ-9)

# கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை நாடாளுமன்றில் மீள சமர்ப்பிக்கத் தேவையில்லை

## -அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள பொதுக்கட்டமைபு உடன்படிக்கையை நாடாளுமன்றத்தில் மீள சமர்ப்பிக்கத் தேவையில்லையென தபால் தொலைத்தொடர்பு, மலையக அபிவிருத்தி அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

கைச்சாத்திடப்பட்ட பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை நாடாளுமன்றத்தில் மீளச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரசன்ஸ அண்மையில் தெரிவித்த கருத்துக்களுக்குப் பதலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டமை தொடர்பான ஆவணம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆவணம் சமர்ப்பிக்கப்பட்ட போது ஜே.வி.பியினர் நாடாளுமன்றத்தைக் குழப்பியடித்து அதற்கான சந்தாப்பத்தை வழங்காததால் விவாதத்தை நடாத்த முடியவில்லை.

இதனால் சபைத் தலைவர் ஆவணத்தின் ஒரு பகுதியை மாத்திரம் வாசித்து அதனை சபையில் சமர்ப்பித்தார்.

சபையில் சமர்ப்பித்தபின் அது சட்டமாக நடைமுறைப்படுத்தப்படும். நாடாளுமன்றத்தில் கட்டமைப்பு நகலை சமர்ப்பித்து மக்களையும் தெளிவுபடுத்துவது நோக்காகவிருந்தது. ஆனால் இதற்கு எமக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இதற்கு முன்னரும் இவ்வாறான வேறு ஆவணங்கள் கைச்சாத்திடப்பட்ட பின்னா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இருப்பினும் நாம் ஜனநாயக ரீதியாக இதனை மக்கள் முன் சமர்ப்பிக்க உத்தேசித்திருந்தோம்.

அது இவ்வாறு இடம்பெறாததினால் செயற்திட்டமாக நடைமுறைப்படுத்துகின்றோம். இனி அதனை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு சென்று பேச்சுவார்த்தை நடாத்த வேண்டிய தேவையில்லை.

கைச்சாத்திடவிருந்த ஆவணத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தோம். சமர்ப்பித்திருந்த ஆவணத்திலேயே கைச்சாத்திட்டிருந்தோம். இதனை நாடாளுமன்ற ஹன்சாட் பதிவேட்டில் பார்க்கமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8)

## நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

தேசியப் பாடசாலைகள் மற்றும் மாகாண சபைகளின் கீழுள்ள பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் இந்தவாரம் வெளியிடப்படவுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க இது தொடர்பாகத் தகவல் தருகையில் இப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் இடம்பெறும் என்று கூறியுள்ளார். (து-2)

# காரணமின்றி எதிர்க்கிறார்கள் பொதுக்கட்டமைப்பு பற்றி அலவி

(கொழும்பு)

சுனாமிக்கு பின்னரா்ன நடவடிக்கை முகாமைத்துவக் கட்டமைப்பானது சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்க்கைத்தரத்தை கட்டியெழுப்புவதற்கான செயற்திட்டம் மட்டுமே என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உப தவிசாளரும் மேல் மாகாண ஆளுநருமான அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

இதற்கு சில பகுதியினா் எதிர்ப்பு தெரிவிப்பதற்கு என்ன காரணமெனப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவ கட்டமைப்பு தொடர்பாக கல்விசார் தொழிற்சங்கத் தொழிலாளர்களை நேற்று முன்தினம் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டமானது நாட்டைப் பிரிக்கும் ஒரு செயல் அல்ல என்று அவர் மேலும் குறிபபிட்டுள்ளார். (து-9)

# பிணமாக மீட்கப்பட்ட ஊர்காவல் படை வீரர்

(கொழும்பு)

சேருநுவர, சேருவில பகுதியில் கடத்திச் செல்லப்பட்ட ஊர்காவற்படை வீரரின் சடலம் சேருநுவர காட்டுப்பகுதி ஒன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சேருவில பிரதேச மக்கள் கொடுத்த தகவலை அடுத்து இந்தச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும்,

சடலம் கண்டுபிடிக்கப்படும் போது சிதைவடைந்த நிலையில் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விறகு வெட்டச் சென்றிருந்த குறிப்பிட்ட ஊர்காவற்படை வீரர் கடந்த 19ஆம் திகதி ஆயுதம் தரித்த ஒரு குழுவினரால் கடத்திச் செல்லப்பட்டார் என்றும் சேருவில பொலிஸ் சோதனைச் சாவடியில் கடமையாற்றிய ஊர்காவற்படை வீரரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (து-2)

# பொதுக்கட்டமைப்பின் மூலமாக கடல் உள்ளிட்ட வடக்கு கிழக்கின் பூரண அதிகாரம் புலிகளின் கைகளில்!

## -விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அரசாங்கம் கூறியவற்றை நிரூபிக்க முடியாமல் தவிக்கிறது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைத் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே விமல் வீரவன்ஸ இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எப்போதும் அரசாங்கத்தின் பாவச் செயல்களுக்குத் துணை போகின்ற தமது வாக்கு வங்கிகளை இழந்துள்ள சமசமாஜ மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெற்றோல் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் நிரப்பிக் கொண்டு ஓடுபவர்கள்.

அரசியல் அநாதைகளாக இவர்கள் இருப்பதனாலேயே அரசாங்கத்துக்கு துணை போகின்றனர்.

திஸ்ஸவிதாரணவும் டி.யூ.குணசேகரவும் தொலைக்காட்சி நிலையங்களில் நித்திரை கொள்ளாமல் கண் விழிக்கின்றனா். இது வயதான அவர்களின் உடல்நலனுக்கு கேடாகும்.

எனவே, இதனை உணர்ந்து அரசாங்கத்திற்கு துணை போகின்றவர்கள் எம்மோடு இணைந்து கொள்வது நல்லது.

இல்லையேல், அரசின் போக்கிற்கு தலையாட்டுபவர்களை தேசத்துரோகிகளாகக் கருத வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

கடல் முழுவதுமான வடக்கு கிழக்கின் பூரண அதிகாரம் விடுதலைப்புலிகளுக்கு பொதுக்கட்டமைப்பின் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, பிரதேச குழுவொன்று அமைக்கப்படுகின்றது. இதற்கு நிதி அதிகாரங்களும் முழுமையாக வழங்கப்படுகின்றன. இந்த வகையில எல்லாக் குழுக்களிலும் வெள்ளையா்கள உள்ளனர்.

இதில் பிணக்கு ஏற்பட்டாலும் தீர்க்கப் போவது அவர்களே எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-4)

# அன்று எதிர்த்தவர் இன்று ஆதரிப்பது ஏன்?

## ஜனாதிபதியிடம் சோமவன்ச கேள்வி

'சுனாமி' நிவாரணசபை பற்றி கருத்துத் தெரிவித்துள்ள ஜே.வி.பி, இதன்மூலம் புலிகள் அரசாங்கத்தை அதிகாரம் செய்கிறார்களென கூறியுள்ளது. புலிகளே இக்குழுவின் தலைவர். அரசாங்கம் துணைத்தலைவர். எனவே அரசாங்கத்தை கட்டுப்படுத்தும் நிலையில் புலிகளே உள்ளனர். இவ்வாறு ஜே.வி.பிதலைவர் சோமவன்ச அமரசிங்க கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போது தெரிவித்தார்.

மேலும் 2003இல் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியின் போது 3 அமைச்சுக்களை பொறுப்பேற்கும் போது ஜனாதிபதி என்ன கூறினார் என சோமவன்ஸ கேள்வி எழுப்பினார்.

ஐ.தே.க.யின் அரசாங்கத்தால் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது அது நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலானது என கூறிய ஜனாதிபதி அப்போது ஐ.தே.க அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் நாட்டு நிலைமை கெட்டுவிட்டது எனக் கூறி 3 அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுக் கொண்டார். ஆனால் தற்போது அவரே அதே புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் திருத்திப் புதுப்பித்துள்ளார். அத்துடன் இந்நாட்டில் தன் உயிருக்கு பாதுகாப்பில்லை அச்சுறுத்தல் உள்ளது எனவும் தெரிவிக்கிறார். அப்போது எதற்காக 3 அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுக் கொண்டார் என்று இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியைக் கேட்க விரும்புகிறோம்.

மாகாணகுழுக்கள் பற்றி தெரிவித்த அவர் 10 பேர் அங்கம் வகிக்கும் இக்குழுவில் ஐவர் புலிகள். அவர்களே தலைவர் பதவி யில உள்ளனர்.' முதன் முறையாக இலங்கை அரசாங்கம் வட கிழக்கில் கீழ்ப் பணியாளராக செயற்படுகிறது என்று சோமவன்ச அமரசிங்க மேலும் தெரிவித்தார். (து-6)

# வீடமைப்பு மீள் நிர்மாணப் பணிகள்

## வலி – மேற்குப் பிரிவில் ஆரம்பம்

(பொன்னாலை)

உலக வங்கியின் நிதிப்படுத்தலின் கீழ் வடக்கு - கிழக்கு மீள் நிர்மாண வீடமைப்புத்திட்ட வேலைகள் வலி-மேற்குப் பிர தேச செயலர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வலி-மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராமங்களான செம்மணத்தி, ஊரத்தி, பல்லசுட்டி, முன்கோடை, பிள்ளையார் கோயிலடி ஆகிய பகுதிகளிலுள்ள பயனாளிகளுக்கு இவ் வீடுகள் வழங்கப்படவுள்ளன.

இவ் வீடமைப்புக்கான ஆரம்பகட்ட வேலைகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வீடொன்றை நிர்மாணிப்பதற்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்படவுள்ளது. வேலைகளை ஆரம்பிப்பதற்கென பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் முதற்கட்டமாக 50 ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ் வீடமைப்பு வேலைகள் யாவும் 4 மாதங்களுக்குள் பூர்த்தியாகிவிடும் என்று வலி- மேற்குப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-49)

# தனித்திருந்த மூதாட்டியின் மரணம் கொலையா? தற்கொலையா?

கரவெட்டி கோவில் சந்தைப் பகுதியில் அமைந்துள்ள கட்டைவேலி கிராமத்தில் தனித்திருந்த 75 வயதான கந்தையா - தெய்வானை என்ற மூதாட்டி யன்னல் கிறில் கல்லில் சுருக்கிடப்பட்டு இருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் அயலவரால் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. சம்பவம் பற்றி அறிந்த நெல்லியடிப் பொலிஸார் சடலத்தை மீட்டு பரு.வைத்தியசாலையில் பிரேத பரிசோதனையை மேற்கொண்டனர்.

பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதவான் சபா.இரவீந்திரன் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. மூதாட்டியின் கைவசம் இருந்த ஒரு தொகுதி நகைகள் காணாமல் போய் உள்ளதாக அறியப்படுகிறது. (து-101)

## மாவிலைத் தத்தி நோய்க்கு மருந்து

(மருதங்கேணி)

வடமராட்சிப் பகுதி எங்கும மாமரத்தில் நோய் பிடித்துள்ளதால் மாமரத்தின் இலைகள் கருகி, காய்ப்பதுவும் மிகவும் குறைவாக காணப்படுகிறது. இதனால் சந்தைகளில் மாம்பழத்தின் விலை அதிகரித்துள்ளது.

இவ் 'மாவிலை தத்து' என்னும் நோய்பீடிப்பதால் தான் மாவிலைகள் கருகுகின்றன. இதற்கு 'டைமிற் ஓர்விட்' என்னும மருந்தை ஒரு அவுன்ஸுக்கு மூன்று கலன் நீரில் கரைத்து வீசினால் அந் நோயின் தாக்கம் குறைந்து விடும என புலோலி விவசாய போதனாசிரியர் தெரிவிக் கின்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தெளிடு கருவி விவசாய கந்தோரில் உள்ளது எனவும் நாங்கள் இலவசமாக கொடுக்கிறோம் எனவும் அதை வாங்கி பாவித்து பயன்பெறுமாறும் தெரிவித்தார். (அ-35)

## கரும்புலிகள்தினம்

(பொன்னாலை)

தமிழீழ கரும்புலிகள் தினத்தைச் சிறப்பான முறையில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதல் கரும்புலி கப்டன் மில்லர் வீரகாவியமான தினத்தை மையமாக வைத்து ஜுலை மாதம் 5ஆம் திகதி கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

கரும்புலிகள் தினம் குறித்த விசேட ஊர்திகள் குடாநாட்டின் பல பாகங்களிலும் வலம் வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (து-49)

## மெய்வன்மைப் போட்டி

(அல்லைப்பிட்டி)

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு அதிபர் வா.ஜெயரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக இளைப்பாறுகை பெற்ற நல்லூர்க் கோட்டக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ச.காங்கேயன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ந-98)

# தரவு பதிவு இயக்குநர் பதவிக்கு விண்ணப்பங்கள்

(கொழும்பு)

இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தின் தரவு பதிவு இயக்குனர் பதவிக்காகவுள்ள 9 வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதியுடைய இலங்கைப் பிரஜைகளின் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

இப்பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் அல்லது இலக்கியம், கணிதம் /பிரயோக கணிதம்/ தூய கணிதம், அடிப்படை கணிதம், ஆங்கிலமொழி என்பவற்றுடன் இரசாயனவியல;/ உயிரியல், பௌதீகவியல் போன்ற பாடங்களில் ஒன்று உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சித்தி அல்லது அதே பரீட்சையில் கணிதம், சிங்களம்/ தமிழ் மொழி, விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்கள் உட்பட 5 பாடங்களில் ஏ அல்லது பி அல்லது சி சித்திகளுடன் 6 பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சித்தி.

அல்லது முதன்மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் உட்பட 5 பாடங்களில் ஏ அல்லது பி தரச் சித்திகளுடன் 6 பாடங்களில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது தேசிய பொது கல்வி சான்றிதழ் பரீட்சையில் (சா/த) இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 'பரீட்சை ஆணையாளர் நாயகம்,ஒழுங்கமைப்பும் வெளிநாட்டுப் பரீட்சைகளும் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பெலவத்தை பத்திரமுல்ல' எனும் முகவரிக்கு 2005.07.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். (து-7)

# பிரணாப் முகர்ஜி - ரைஸ் சந்திப்பு



(வோஷிங்டன்)

ஐ.நா பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி வழக்குவது தொடர்பாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசா ரைஸை இந்திய இராணுவ அமைச்சர் பிரணாப் முகர்ஜி சந்தித்துப் பேசியுள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங் அடுத்த மாதம் அமெரிக்காவில் அரசு முறை பய்ணம் மேற்கொள்கிறார். அவரது பயண ஏற்பாடுகளை உறுதி செய்யவும் இராணுவ ஒத்துழைப்பு தொடர்பாக பேச்சு நடத்தவும் இந்திய இராணுவ அமைச்சர் பிரணாப் முகர்ஜி அமெரிககாவில் ஒன்பது நாள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசா ரைஸை அவர் சந்தித்துப் பேசினார்.

ஐ.நா பாதுகாப்புச் சபையில் இந்தியா, ஜெர்மனி, பிரேசில், ஜப்பான், ஆகிய நான்கு நாடுகளும் நிரந்தர உறுப்பினர் இடம் கேட்டு கூட்டு முயற்சி மேற்கொண்டுள்ளன. ஐ.நாவுக்கு நிதி உதவி வழங்கும் நாடுகளில் ஜப்பான் இரண்டாம் இடத்தில் உள்ளது. இதனால் ஜப்பான் நாட்டிற்கு அமெரிக்கா பகிரங்கமாக ஆதரவளிக்கிறது. பிரணாப் முகர்ஜியிடம் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் இதை நேரடியாகவே அறிவித்தார். இருப்பினும் இந்தியாவுக்கு ஆதரவளிப்பது பற்றி அவர் எந்த வாக்குறுதியும் வழங்கவில்லை.

இந்தியாவிற்கு அமெரிக்க நிறுவனங்கள் ஆயுதங்கள் விற்பனை செய்வது, எவ்-16 ரக போர் விமானங்கள் கொள்முதல், அணுசக்தி தொழில்நுட்பப் பரிமாற்றம் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து அமெரிக்க இராணுவ அமைச்சர் டொனால்டு ரம்ஸ்பெல்ட் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகா ஸ்டீபன் ஹேட்லி, துணை அதிபர் டிக் செனி ஆகியோரை பிரணாப் முகர்ஜி சந்தித்தார்.

அணுசக்தி தொழில்நுட்பப் பரிமாற்றத்தில் இந்தியா மீதான தடையை அமெரிக்கா நீக்க வேண்டும். அணுசக்தியை ஒரு போதும் இந்தியா தவறாக பயன்படுத்தியதில்லை. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா தீவிரவாதத்தை எதிர்த்து கடுமையாகத் தொடர்ந்து போராடி வருகிறது. அமெரிக்காவும் ஜனநாயகத்தை மதிக்கும் நாடு என்பதால் இந்தியாவுகக்கு உதவத் தயங்கக் கூடாது என பிரணாப் முகர்ஜி வலியுறுத்தினார். (ந)

## உலக தரிசனம்

### 16 அமெ.இராணுவத்தினர் ஹெலி விபத்தில் பலி!

ஆப்கானிஸ்தானில் கோனார் மாநிலத்தில் அமெரிக்கப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று விழுந்து நொருங்கியதில் குறைந்தது 16 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அமெரிக்கத் தகவல்கள் கூறுகின்றன.

கோனார் வட்டாரத்தில் ரோந்து பணி மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வந்த அந்த அமெரிக்க சினூக் ரக இராணுவ ஹெலிகொப்டரைத் தாங்களே குறி வைத்து தாக்கி வீழ்த்தியதாக தலிபான் தீவிரவாத அமைப்பு கூறியுள்ளது.

இருப்பினும் இவ்விபத்து தொடர்பான முழு விபரங்கள் இதுவரை கிடைக்கப் பெறாததால், இச்சம்பவத்தில் தலிபான்களின் பங்கு குறித்து பென்டகன் இராணுவத் தலைமையகம் கருத்து எதுவும் கூறவில்லை. (ந)



**கடலில் நிகழ்ந்த மிகப் பெரிய போரான 'டிராபால்ஹர்' என்ற போரின் 200வது ஆண்டு விழா சமீபத்தில் இங்கிலாந்தில் போர்ட் மவுத் என்ற இடத்தில் நடந்தது.**

**இந்தவிழாவில் 32 நாடுகளில் இருந்து மொத்தம் 167 கப்பல்கள் பங்கேற்றன. இந்தியா சார்பில் ஐ.என்.எஸ்.மும்பை என்ற கப்பல் பங்கு கொண்டது.**

**இந்த விழாவில் பங்கேற்ற கப்பல்களை இங்கிலாந்து ராணி 2ஆம் எலிசுபெத கப்பலில் சென்று பார்வையிட்டார். இந்திய கப்பலை அவர் கடந்து சென்ற போது இந்திய கடற்படை வீரர்கள் அவருக்கு சல்யூட் அடித்த சாட்சி.**

# குஜராத்தில் தொடர் மழை; இதுவரை 43 பேர் உயிரிழப்பு

## 2 இலட்சம் பேர் இடப்பெயர்வு

(அகமதாபாத்)

குஜராத்தில் 5 நாளாக இடைவிடாத மழை பெய்து வருவதால் நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இத் தொடர் மழைக்கு 43 பேர் பலியாகியுளளனர். 2 இலட்சம் போ வீடுகளை விட்டு வெளியேற்றப் பட்டுள்ளனர்.

வடமாநிலங்களில் தென்மேற்கு பருவ மழை பெய்கிறது. குறிப்பாக குஜராத், மராட்டியம், மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் பலத்த மழை கொட்டுகிறது.

குஜராத் மாநிலத்திலும் பலத்த மழை கொட்டுகிறது. நேற்று 6வது நாளாகவும் அடை மழை பெய்தது.

அந்த மாநிலத்தில் உள்ள வதோதரா, பாருச், அகமதாபாத், நர்மதா, கெட்டா வால்சாத், நவ்சாரி, சூரத், டாங்ஸ் ஆகிய மாவட்டங்கள் மழையால் அதிக பாதிப்படைந்துள்ளன.

அந்த மாநிலத்தில் மழை வெள்ளத்துக்கு நேற்று வரை 43 பேர் இறந்துளளனர். 3000 கிராமங்கள் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. (ந)

# ரைஸ் - அனான் சந்திப்பு



**ஐ.நா பொதுச் செயலாளர் நாயகம் கொபி அனானை முதன் முறையாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் கொண்டலிசா ரைஸ் சந்தித்துப் பேசியுள்ளார்.**

**இவர் சமீபத்தில் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கு சென்றார். லிசா அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரியாக பொறுப்பேற்ற பிறகு ஐக்கிய நாடுகள் சபைக்கு சென்றது இதுவே முதல் முறையாகும்.**

**அங்கு ஐ.நா பொதுச் செயலாளர் கொபி அனானை சந்தித்து லிசா பேசினார். முன்னதாக லிசாவுக்கு வாழ்த்து கூறும் கொபி அனான்.**

# ஐ.நா வில் முடிவெடுக்கும் அமைப்புகள் வல்லரசுகளுக்கு சாதகமாக உள்ளன

## இந்தியா குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

ஐ.நா சபையில் சர்வதேசப் பிரச்சினைகள் தொடர்பான முடிவுகளை எடுக்கும் அமைப்புகள் வளர்ந்த நாடுகளுக்குச் சாதகமாக உளளதாக மத்திய வெளியுறவு இணை அமைச்சர் இ.அகமது குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐ.நா வில் 'வளர்ச்சிக்கான நிதி' குறித்த மாநாட்டையொட்டி கடந்த செவ்வாய்க்கிழமை பேசிய அவர், இத்தகைய அமைப்புகளில் வளரும் நாடுகளுக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

சர்வதேச நிதி அமைப்புகளிலும் சீர்திருத்தங்கள் செய்வது அவசியம். இதிலும் வளரும் நாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். அதாவது வளரும் நாடுகளுக்கு 'வாக்குரிமைகளில் சம அதிகாரம் தரப்பட வேண்டும். அமைப்பு ரீதியான இந்தச் சீர்திருத்தம் மிகவும் முக்கியமானது.

இதன் மூலம் வளரும் நாடுகள் நேரடியாகப் பலன்களைப் பெற வேண்டும். உலகமயமாக்கலில் சமச்சீரின்மை என்பது தனிப்பட்ட முறையிலோ ஏகமனதாகவோ தீர்க்க முடியாது என்பதை வளர்ந்த நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும்.

என்வே அனை வரும் சேர்ந்துதான் இது போன்ற பிரச்சினைகளில் தீர்வு காண வேண்டும் என்றார். (ந)

### சிங்கங்கள் தாக்கி மாணவன் பலி

(பீஜிங்)

சனாவின் வட கிழக்கு பகுதியில் அமைந்துள்ள மிருகக்காட்சி சாலையில் 18 வயது மாணவனை சிங்கங்கள் கடித்துக் குதறியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

பள்ளியில் நடந்த தேர்வுக்குப் பின்னர், தமது இதர நண்பர்களுடன் மிருகக்காட்சி சாலைக்குச் சென்றிருந்த அவர், பாதுகாப்புக்காகப் பொருத்தப்பட்டிருந்த இரண்டு மீற்றா உயரமுடைய வேலியில் ஏறி நின்றிருந்த சமயத்தில் அவரை சிங்கங்கள் தாக்கியதாக பீஜிங் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. (ந)

# மகள் இந்தியா வர அனுமதிக்குக!

## நீதிமன்றில் நளினி மனுத்தாக்கல்

(சென்னை)

ராஜீவ் கொலை வழக்கில் கைதான நளினி, தனது மகள் இலங்கையிலிருந்து இந்தியா வர விசா தரக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

1991ஆம் ஆண்டு மே 21ஆம் திகதி சென்னை அருகே ஸ்ரீபெரும்புதூரில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொல்லப்பட்டார். தனு என்ற இலங்கைப் பெண் மனித வெடிகுண்டாக செயல்ப்ட்டு ராஜீவைக் கொன்றார். இச்சம்பவத்தில் மேலும் பலர் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக சென்னையைச் சேர்ந்த நளினி உட்பட பலர் கைது செய்யப்பட்டனர். கைதான போது நளினி கர்ப்பமாக இருந்தார். அவரது கணவர் இலங்கையைச் சேர்ந்தவர். அவரும் ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டார். 1992ஆம் ஆண்டு நளினிக்குப் பெண் குழந்தை பிறந்தது.

மெகாரா என்ற பெயரிடப்பட்ட அக் குழந்தை இலங்கையில் நளினியின் மாமியார் வீட்டில் வளர்ந்து வருகிறது.

ராஜீவ் கொலை வழக்கில் நளினிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அவரது கருணை மனு ஏற்கபட்டு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

நளினி வேலூர் சிறையில் இருக்கிறார். தற்போது அவரது மகளுக்கு 13, வயதாகிறது.

தனது மகளை இந்தியாவுக்கு அழைத்து வர விரும்புவதாகவும அதற்கு அனுமதி தர வேண்டும் என்றும் கோரி உயர் நீதிமன்றத்தில் நளினி மனுத்தாக்கல் செய்துள்ளார்.

தனது மகளுக்கு விசா அனுமதி தரக்கோரி அளித்த விண்ணப்பத்துக்கு மத்திய அரசு பதில் அளிக்கவில்லை என்று மனுவில் நளினி கூறியுள்ளார்.

இம்மனுவை நீதிபதி பி.டி.தினகரன் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு ஏற்றார். இம்மனு குறித்து 4 வாரங்களில் பதில் அளிக்குமாறு வெளியுறவுத்துறை அமைச்சகத்துக்கு நோட்டீஸ் அனுப்ப அவர் உத்தரவிட்டுள்ளார். நளினி சார்பாக வழக்கறிஞர் எஸ்.துரைசாமி ஆஜரானார். (ந)

## சென்னை உயர் நீதிமன்றத்தில்

# சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(சென்னை)

சேது சமுத்திரத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சுற்றுச் சூழல் துறை அளித்த தடையிலலாச் சான்றிதழை இரத்து செய்யக கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடலோரப் பாதுகாப்பு நடவடிக்கைக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பெர்னாண்டஸ் பொதுநலன் அடிப்படையில் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

சேது சமுத்திரத்திட்டம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

சேது சமுத்திரத்திட்டத்தை நிறைவேற்றும் முன்பு மேற்கொள்ள வேண்டிய அறிவியல் பூர்வமான ஆய்வுகள் முழுமையாக நடத்தப்படவில்லை. மத்தியில் கூட்டணி அரசில் இடம்பெற்றுள்ள அரசியல் கட்சிகளின் வலியுறுத்தல் காரணமாகவே இத்திட்டம் அவசரமாக நிறைவேற்றப்படுகிறது.

முக்கியமான விஷயங்களை கருத்தில் கொள்ளாமலேயே கடந்த மார்ச் 31ஆம் திகதி இத்திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தால் ஏற்படக் கூடிய சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து மத்திய அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. மாநில அரசின் கருத்துக்களைப் புறக்கணித்து விட்டு இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு முனைந்திருப்பது சரியல்ல.

இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய தரை வழி மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் டி.ஆர்.பாலு மிகவும் அவசரம் காட்டுகிறார். இது அரசியல் ரீதியிலான முடிவாகும்.

சரியான ஆய்வு நடத்தப்படாமல், இத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இதனால் இந்தியாவிலும், இலங்கையிலும் ஏற்படப் போகும் சமூக, பொருளாதார, சுற்றுச் சூழல் பாதிப்புகள் கருத்தில் கொள்ளப்படவில்லை.

சேது சமுத்திரத் திட்டத்துக்காக கடலை ஆழப்படுத்தும் போது, வங்கக் கடலில் மீன் வளத்துக்கு அதிக பாதிப்பு ஏற்படும் என்றும் அம் மனுவில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இவவழக்கு எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை விசாரணைக்கு வரவுள்ளது. (ந)

ஆற்றாரும் ஆற்றி அடுபஇடன் அறிந்து
போற்றார் கண் போற்றிச்செயின் - குறள்

வலம்புரி

## சோமவன்ஸவைக் கைதுசெய்ய ஜனாதிபதி துணிவாரா?

கெஞ்சினால் மிஞ்சுவதும் மிஞ்சினால் கெஞ்சுவதும் மனித சுபாவம். இதனை இலங்கையின் அரசியல் புலத்தில் தாராளமாகப் பார்க்கலாம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை தூற்றித் திரிந்த முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவை நீதிமன்றத்திற்கு அழைத்து தண்டனையும் வழங்க அவர் பெட்டிப்பாம்பாக அடங்கிப்போனமை கண்கூடு. அது மட்டுமல்ல, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் கட்சியில் இருந்து வெளியேறி ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியில் எஸ்.பி.திஸாநாயக்கா இணைந்த போது அந்தக்கட்சி அவருக்கு செங்கம்பளம் விரிக்காத குறையாக வரவேற்றது.

ஜனாதிபதியின் பக்கத்தில் அவருக்கு நெருக்கமாக இருந்த் ஒருவர் தமது பக்கம் வந்திருப்பது கட்சிக்கு பெரும் லாபம் என்று ஐக்கியதேசியக்கட்சி கருதியது.

அதனால் எஸ்.பிக்கு முன்னுரிமை அளித்தது. இந்த முன்னுரிமையின் உள்ளார்ந்தத்தைப் புரிந்து கொள்ள முடியாத எஸ்.பி.திஸாநாயக்கா அதனை தனக்கு இருக்கக் கூடிய தனிப்பட்ட செல்வாக்காகவே கருதினார்.

ஆனால் ஐக்கிய தேசியக்கட்சியால் தனக்கு எந்த இலாபமும் இல்லை என்பதையோ, அல்லது ஐக்கிய தேசியக்கட்சி தனக்குத் தருகின்ற மதிப்பு மரியாதை எல்லாம் தன்னை படுகுழியில் விழுத்தும் என்றோ எஸ்.பி நினைக்கவில்லை.

குளிர்ந்த தண்ணீர் நிறைக்கப்பட்ட அண்டாவிற்குள் விடப்பட்ட ஆமை மகிழ்வாக நீந்திக்கொள்ளும். அடுப்பில் வைக்கப்பட்ட அந்த அண்டாவிற்கு கீழ் நெருப்பு மூளப்போவதும் குளிர்ந்த நீர் கொதித்து தான் உயிர்துறக்கப் போவதையும் உணராத ஆமைபோல் எஸ்.பி.திஸாநாயக்காவும் இருந்தார்.

இன்று அவர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் வேளையில் அவருக்காக குரல்கொடுக்க ஐக்கிய தேசியக்கட்சி முன் வரவில்லை. மாறாக ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா விடம் மண்டியிட்டு அவரிடம் மன்னிப்புக்கேட்கும் பரிதாபநிலையே எஸ்.பிக்கு ஏற்பட்டுள்ளது.

நீதியின் கீழ் எஸ்.பி.முன்னிறுத்தப்பட்டதால் அவரின் ஆதரவாளர்கள் அவரை விட்டு விலகிச் செல்லும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

எஸ்.பி.திஸாநாயக்காவின் விடயத்தில் ஜனாதிபதிக்கு மாபெரும்வெற்றி என்று கூறும் அளவிற்கு நிலைமை உள்ளது. எனினும் ஜனாதிபதியின் ஆட்சியில் ஜே.வி.மட்டும் கும்மாளம் போடுவது எப்படி?

கொலைக்குற்றச்சாட்டின் பேரில் வெளிநாடுகளில் தலைமறைவாகி இருந்த ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இப்போது நாட்டில் நடமாடுகிறார். மேடைஏறி முழக்கம் இடுகின்றார்.

இவை எப்படி நடந்தாகின்றது. எஸ்.பியின் விடயத்தில் கடைப்பிடித்த முறைமை ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸவின் விடயத்தில் ஜனாதிபதி கடைப்பிடிக்காதது ஏன் என்ற கேள்விகளுக்கு மத்தியில் கொலைக்குற்றம் சாட்டப்பட்ட ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸவை கைதுசெய்து நீதிமன்றில் நிறுத்தும் பொறுப்பை ஜனாதிபதி செயற் படுத்த வேண்டும்.

எஸ்.பி.போல் சோமவன்ஸவும் சிறைக்குப்போக ஜே.வி.பியின் கொட்டம் அடங்குவது உறுதி. இதனை செய்ய ஜனாதிபதி துணிவாரா?

### மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள

# 30 அமெ.தன்னார்வத் தொண்டர்கள் இரு வாரங்களில் இலங்கை வருகை

(கொழும்பு)

கடல் கோள் மீள் கட்டுமானப்பணிகளில் இலங்கை மக்களுக்கு உதவுவதற்கு அடுத்த இரண்டு வாரங்களிலும் 30 அமெரிக்க சமாதான உதவித தன்னாவத் தொண்டர்கள் இலங்கைக்கு வருகைதரவுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது இவர்கள் அனைவரும் முன்னர் பல்வேறு நாடுகளில் சமாதான தன்னார்வ அணியினராக பணியாற்றியவர்கள் ஆவர். இவர்கள் சர்வதேச நிறுவன அபிவிருத்தி மற்றும் ஒருங்கிணைப்பு முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் என்பவற்றில் இருந்து குடிசா பொறியியல் வரையான பல்வேறு துறைகளில் நிபுணத்துவம பெற்றவர்கள் ஆவர்.

திருகோணமலை,அம்பாறை, அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி மற்றும் களுத்துறை உட்பட கரையோரங்களில் திட்டங்களை மேற்கொள்வதில் பங்காளி அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுவார்கள்.

கடல் கோளின் பின்னரான புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளில இலங்கை மக்களுக்கு உதவுவதற்குக் கிடைத்துள்ள சந்தர்பபம் அமெரிக்காவின் நெருக்கடிக்கான அணியினருக்குக் கிடைத்த கௌரவமாகும் என்று அதன் வதிவிடப்பிரதிநிதி ரொபில் கண்டினோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தினால் அரசாங்க அமைச்சர்களே கடும் அதிர்ச்சி

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் கைச்சாததிட்டுள்ள பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தைப் பார்த்து அரசாங்கத்தின் அமைச்சர்களே ஆச்சரியமடைந்ததாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது:

அவ்வியக்கம் நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நெருக்கமான கூட்டமைப்பு அமைச்சர்களிட மிருந்து பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை பாதுகாத்து வைப்பதற்காகப் பெரும் பணம் படைத்த அரசசார்பறற நிறுவணங்களிடம் ஜனாதிபதி அதனைக் கையளித்திருநதார்.

எனினும் அந்த ஒப்பந்தம் பிரதமர் உட்பட தேசப்பற்றுளள அமைச்சர்களிடம் முன்னரே காண்பிக்கப்பட்டிருந்தால் விடுதலைப்புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்காது.

சுய இலாபத்திற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டைக் காட்டிக்கொடுத்துவிட்டார் எனவும் தேசப்பற்றுளள தேசிய இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக இந்தப் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றபோதும் இந்தக் கட்டமைப்பானது தனிநாடு கோரிவரும் விடுதலைப் புலிகளுக்குத் தனிநாட்டுக் கோரிக்கை நிறைவேற்றும் முகமாகவே அமைந்திருப்பதாகவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.(ற-4)

# விளையாட்டு விழாவில் பங்கேற்க தென்கொரியா செல்ல நிதியுதவி

எதாவரும் 22ஆம் திகதி தென்கொரியாவில் நடைபெறவுள்ள சர்வதேச மதங்களுக்கிடையிலான சமாதான விளையாட்டு விழாவில் பங்குபற்றுவதற்காக தென்கொரியா செல்லவுள்ள வர்ர்களுக்கு அனுசரணை வழங்குமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி ஆர்.றொகான் ராஜசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் சர்வதேச மதங்களுக்கிடையிலான சமாதான விளையாட்டு விழா வருடாவருடம் தென்கொரியாவில் நடைபெற்றுவருகிறது.

கடநத வருடம் நடைபெற்ற போட்டிகளில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு வீரர்களும் ஒரு வீராங்கனையும் பங்குகொண்டனர். மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே மேற்படி வீரர்களுககான பயணச்செலவுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருநதன.இவர்களுள் இருவர் வெளிப்படுத்திய திறமையின் காரணமாகவும், வெளிநாடு சென்று விளையாட்டுப் போட்டிகளில கலந்துகொள்வதற்கு எமது வீரர்களுக்கும் வாய்ப்புக் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு காரணமாகவும் பல இளம் வீரர்கள் மெய வல்லுநர் பயிற்சிகளில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

கடந்த வருடம் போல் இவ்வருடமும் மேற்குறித்த விளையாட்டுவிழா எதிர்வரும் ஜூலை மாதம் 22ஆம் திகதி முதல் தென்கொரியாவில் நடைபெறவுள்ளது.இதற்காக தொடர் பயிற்சியில் உள்ள யாழ்.மாவட்ட வீர வீராங்கனைகள் கொண்டிருககும் திறமையின் அடிப்படையில் இரண்டு வீராங்கனைகளும் 7 வீரர்களும் ஒரு அணிப் பொறுப்பாளருமாக மொத்தம் 10 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஒவ்வொருவருக்குமான விமானச்சீட்டு 72ஆயிரத்து 500 ரூபாவாகும். அதுதவிர ஏனைய பிரயாணச் செலவுகள் 10 ஆயிரம் ரூபா வரை ஏற்படலாம்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இவர்களுள் 6பேர் வெவ்வேறு பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள் இவர்களிடமிருந்து 82ஆயிரத்து 500 ரூபாவினைச் செலவிடுமாறு கோருவது சாத்தியமில்லை. வியாபார நிறுவனங்களிடமிருந்தும் தனவந்தர்களிடமிருந்தும் அனுசரணையைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என கருதுகிறேன் எனக் குறிப்பிடப்படடுள்ளது.

தென்கொரியாவுக்குச் செல்லவுள்ளோர் விபரம்:

யாழ்.மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஏ. தூரன், ரி.கவிராஜ், வசாவிளான் ம.வியைச் சேர்ந்த ஏ.சிறிநிவாஜ், ரி.கஜந்தன, கனகரததினம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி கே. தர்சினி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த வி.கஜீதா, சென் பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எம்.சன்ஜீப்,(பழைய மாணவன) மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.கமலஜோகன், ஆர்.ராஜகாந்தன்,மாவட்ட விளையாட்டு பயிற்றுநர் அணிப் பொறுப்பாளர் பீ.கிருபாகரன். (அ-19)

## பொலிஸ் விசேட செயலணி அதிரடி; பாதாள உலகக் கோஷ்டியினர் கைது

(கொழும்பு)

கொழும்பு ஆமர் வீதியில் பொலிஸ் விசேட செயலணிப பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீடொன்றில இருந்து பாதாள உலகக்கோஷ்டியைச் சேர்ந்த 3 உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் கொலை, கொள்ளை, கப்பம் பெறுதல் போன்ற குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படுவதாக பொலிஸ் விசேட செயலணிப பிரிவின் பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தச் சுற்றுவளைப்பின் போது பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என சந்தேகிக்கப்படும் ஒருவர் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்களிடமிருந்து 3 நவீன ரக கைத்துப்பாக்கிகள், இரு கைக்குண்டுகள் மற்றும் கத்திகள சிலவற்றையும் பொலிஸ் விசேட செயலணிப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைப்படி கடந்த வாரத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விசேட நடவடிக்கை செயல் திட்டத்தின் கீழ் கொழும்பு மற்றும் சன நெருக்கடியான பிரதேசங்களில் சந்தேகத்துக்குரிய இடங்களில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தெரிந்ததே. (ற-8)

## தனியார் பஸ் கட்டணங்கள் மீண்டும் உயரும் சாத்தியம்

(கொழும்பு)

எரிபொருட்களின் விலை உயரும் பட்சத்தில் தனியார் பஸ் கட்டணங்கள் மீண்டும் உயர்த்தப்படும் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

டீசல் விலையை உயர்த்துவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுவதாகவும் கடந்த 27 வருட கால சரித்திரத்தில் எந்தவொரு அரசாங்கமும் தனியார் பஸ் போக்குவரத்துத்துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்துள்ளார். (ற-2)



## திசைரி தியானம்
### விவேகச் சிந்தனைகள்

நாம் பலவாக தோன்றுகிறோம். ஆனால் நமது உண்மை ஒன்றே. அந்த ஒன்றிலிருந்து வேறுபட்டவர்களாக நம்மை நாம் எவ்வளவு குறைவாக நினைக்கிறோமோ அவ்வளவு நமக்கு நல்லது. அந்த முழுப்பொருளிலிருந்து (இறைவன்) நாம் வேறுபடடவர்கள் என்று எவ்வளவு அதிகமாக நினைக்கிறோமோ அவ்வளவுக்கு துயரமும் அதிகமாகும்.

சுவாமி விவேகானந்தர்

# மக்கள் வங்கியின் 44வது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி ஆரம்பித்து 44ஆம் அகவையை அடைந்தமை யை நாடுபூராகவும் கொண்டாடும் முகமாக இன்று ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன.

மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளையின் இவ்விழா உதவிப் பிராந்திய முகாமையாளர் திரு.அ. குகதாசன் தலைமையில் இன்று மாலை 5மணிக்கு நடைபெறும். பிரதமவிருந்தினராக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி கலந்துகொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக வட வலயம் மக்கள் வங்கியின் உத விப்பொதுமுகாமையாளர் மு.க.சிவ பாதவிருதையரும், சிறப்பு விருந் தினர்களாக உதவிப்பிராந்திய பொதுமுகாமையாளர்களான ரி. கே.ஆனந்தராஜா, துரைசிங்கம் ரகு ஆகியோரும் கலந்துகொள்ள வுள்ளனர்.

வங்கியின் வாடிக்கையாளர் களின் உறவை மேம்படுத்தும் முகமாக நிகழ்வுகளும் இடம்பெற வுள்ளன.

இதேவேளை மக்கள் வங்கி யின் ஜெயுரி பரிசுத்திட்டத்தில் பரிசுபெற்றவர்களுக்கான தங்க நாணயம் பரிசாக வழங்கப்படவுள் ளது.

பரிசுபெற்றோர் விபரம் வருமாறு: ஜே.பி.ஜீவராஜா, சிவானந்தம், தி. வாசுகி, பொ.சின்னத்துரை, ஆர். இரவீந்திரன், சிவசுப்பிரமணியம், பிரேமதர்சினி ஸ்ரீதரன். (ச)

## சமாதானப் பேச்சிற்கு....

புலிகளுக்குமிடையில் கைச் சாத்திடப்பட்ட சுனாமி பொதுக் கட்டமைப்புக் குறித்து வெளியிடப் பட்டுள்ள அறிக்கையிலேயே இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சமாதானமும், அபிவிருத்தியும் ஏற்படுவதற்கு இந்தியா பூரண ஆதரவினை வழங்கும்.

ஐக்கிய இலங்கைக்குள் சகல சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் மேற்கொள்ளப் படும் சமாதானப் பேச்சுவார்த்தை களுக்கு தமது ஆதரவினை இந் தியா தொடர்ந்தும் வழங்குமென்று அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச-4)


எம்மிடம் சகலவிதமான ரீவிக்களும், CD, VCD, DVD PLAYER களும், சகலவித மான றேடியோக்களும் மற்றும் மின்சார உபகரணங்களும், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

நியூ சிற்றி ரேடர்ஸ்

மேல்மாடி இல.135/1 கஸ்தூரியார் வீதி
குளத்திற்கு முன்பாக யாழ்ப்பாணம்
T.P: 021 222 3226

L.M.L. மிறீடம்.ஸ்கூட்டர்

பாவனையாளர்களே

இந்தியாவிலும், கொழும்பிலும் உள்ள தொழில் நுட்பவியலாளர்கள் உங்கள் வாகனத்தை மீளாய்வு செய்வதற்காக யாழ்ப்பாணம் வருகைதர உள்ளார்கள். எனவே நீங்கள் காலதாமதமின்றி தொடர்பு கொள்ளவும்.

SPN மோட்டோர்ஸ்
171, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
(c-1464)

காலம்:- 02.07.2005 (சனிக்கிழமை)
நேரம்:- காலை 09 மணிதொடக்கம் 12.00 மணி வரைக்கும்

கலாலயா
பயிற்சியகம்


# நாட்டுப்பற்றாளர் வீரச்சாவு

(கிளிநொச்சி)

அம்பாறை அட்டைப் பள்ளம் பகுதியில் நேற்று முன்தினம் தேசத்துரோகிகளின் தாக்குதலின் போது நாட்டுப்பற்றாளர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளதாக விடுத லைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு வெல்லாவெளி யைச் சேர்ந்த க.அரசகுமார் என் பவரே வீரச்சாவடைந்ததாக அறி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 26.12. 2004 அன்று முல்லைத்தீவுப் பகு தியில் ஏற்பட்ட இயற்கை அனர்த் தம் காரணமாக நாட்டுப்பற்றாளர் இராசமாணிக்கம் தங்கலட்சுமி என்பவர் சாவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கட்டமைப்பிற்கு...

தன்மை குறித்த கேள்வி எழுந் துள்ளதனால் இந்த ஒப்பந்தத்தை ரத்துசெய்யுமாறும், அது தொடர் பான தீர்ப்பு வழங்கப்படும்வரை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத் துவதை இடைநிறுத்துமாறும் அவர்கள் தாக்கல்செய்த மனுவில குறிப்பிட்டிருந்தனர்.

இந்த மனுக்கள் மீதான விசா ரணையே நேற்று ஆராயப்பட்டது.

அதேவேளை பொதுக் கட்ட மைப்புக்கு எதிராக இக்கட்சிகள் ஆர்ப்பாட்டங்களையும், ஊர்வலங் களையும் நடத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-08)

## உயர்நீதிமன்றில்...

பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனக்கூறி அவர்களை ஏமாற்றி னார்கள். இப்போதாவது மகாநா யக்கர்கள் இதுகுறித்து பயமின் றிப் பேசுவதற்கு முன்வரவேண் டும்.

வடக்குக் கிழக்கில் புராதன சொத்துக்கள் 276 இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளன. உடன்படிக் கையின் பின்னர் அவைஃும் அச் சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

நாட்டை அழிக்கும் சக்திகளை பின்தள்ள தேசப்பற்றுள்ள இயக் கம் மக்களுடன் வீதியில் இறங்கி போராட தயாராகவுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

# நிலத்தில் வீழ்ந்த வயோதிபரை உழவு இயந்திரம் மோதியது

(மருதங்கேணி)

வீதியால் நடந்துசென்ற வயோ திபர் ஒருவர் தவறுதலாக நிலத் தில் வீழ்ந்தபோது அவரின் மீது உழவு இயந்திரம் ஏறியதில் படு காயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வதிரி வாய்க்கால்தெருப் பிள் ளையார் ஆலயத்திற்கு முன்னால் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொழும்பைச் சேர்ந்த வின்சன் குணபாலன் (வயது 65) என்ற வயோதிபரே படுகாயமடைந்தவ ராவார்.

நேற்று மாலை 6.30 மணியள வில் பிரஸ்தாப வயோதிபர் வீதி யில் நடந்துசென்றுகொண்டிருந்த போது திடீரென நிலத்தில் விழுந் துள்ளார். அவ்வேளை பின்னால் வந்த உழவு இயந்திரம் அவரின் மேல் ஏறியது.

தலையில் படுகாயமடைந்த அவர் மந்திகை வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். (ச-35)

# கட்டுப்பாட்டை இழந்த ஹன்டர் மின்கம்பத்துடன் மோதியது

சாவகச்சேரியிலிருந்து யாழ்ப் பாணம் நோக்கி வந்துகொண்டி ருந்த ஹன்டர் வாகனம் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து கண்டி வீதியருகே மின்கம்பத்துடன் மோதுண்டதில் அதில் பயணம் செய்த நால்வர் படுகாயமடைந்த னர்.

நேற்றுக் காலை எட்டு மணி யளவில் துணைவியில் வைரவர் கோவிலடியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மின்கம்பம் உடைந்து மின் கேபிள்கள் வீதியில் விழுந் தன. எனினும் மின்சாரத்தால் பாதிப்புக்கள் ஏற்படாததனால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட் டன. (ச-21)

## இராணுவப் புலனாய்வுத்துறையினர்....

கொல்லப்பட்டவர்களில் ஒரு வர் இராணுவச் சீருடையோடும், சாரதியும் மற்றவரும் சிவில் உடை யிலும் இருந்துள்ளனர்.

கொல்லப்பட்ட இராணுவப் புல னாய்வு பிரிவினரிடம் ரி-52 ரக துப்பாக்கி, இரண்டு கைக்குண்டு கள் என்பன கைவசம் இருந்தன என மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர்கள் சார் ஜன்ட் குணரத்ன, லான்ஸ் கோப் ரல் சமிந்தகுமார, கோப்ரல் சமன் குமார ஆகியோர் என அடையா ளம் காணப்பட்டுள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தி லிருந்து 150 மீற்றர் தொலைவில் உள்ள பற்றைக்குள் கொலையா ளிகள் பயன்படுத்திய ரி-56 ரக துப்பாக்கி மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட இரா ணுவ வீரர்களின் சடலங்கள் மரண விசாரணையின் பின் விமா னப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்ரர் மூலம் சொந்த இடத்திற்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளன.

இதேவேளை இந்தத் துப்பாக் கிச் சூட்டுச் சம்பவத்திற்கு விடு தலைப் புலிகளே காரணமென இராணுவம் குற்றஞ்சாட்டியுள்ளது. இதனை மட்டக்களப்பு விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மறுத் துள்ளது. (ச-4)

## மாவடி...

முன்தினமிரவு இவரது வீட்டுக் குச்சென்ற சிலர் அவரை அழைத் துச் சென்றதாகவும், பின்னர் அவ ரைக் காணவில்லை என்றும் தெரி விக்கப்பட்டது.

இதேவேளை, அநாமதேய தொலைபேசித் தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே அவரது சட லம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச)


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



சுவிஸைப் வசிப்பிடமாகக் கொண்ட
அகிலன் - சர்மிளா தம்பதியினரின்

## பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

**மகளிருக்கான**

**மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்.**

**3 மாத கால**

கேக் ஐஸிங், உணவுதயாரித்தல் கூந்தல் அலங்காரம், கைவேலை, *FABRIC PAINTING* வகுப்புகள்.

இரு நாட்களுக்கான அடிப்படை *FACIAL DRESSING* வகுப்புகள்

**6 மாத கால**

உடைதயாரித்தல், செயற்கையான மலர்கள் உருவாக்கும் வகுப்புகள்.

**சனி-ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்:- 10-07-2005**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்:-11-07-2005**

**பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்**

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9-00 முதல் பி.ப 2.30 மணிவரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

(C-1465) -இயக்குநர்





13, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

அகிலன் - சர்மிளா தம்பதியினரின்

## செல்வப் புதல்வி அபிரா

அவர்கள் தனது முதலாவது பிறந்தநாளை சுவிஸில் உள்ள தனது இல்லத்தில் 01.07.2005இல் [இன்று] கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, வெள்ளாந்தெரு யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அம்மம்மா, அம்மப்பா, மாமா, அத்தை, பெரியம்மா, சுவிஸில் வசிக்கும் பெரியப்பா, பிரான்ஸில் வசிக்கும் அப்பம்மா, அத்தைமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள், வட்டுக்கோட்டையில் வசிக்கும் பாட்டியும், கொழும்பில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, சித்தி அனைவரும் செல்வியை சீரும், சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

**க.மகாதேவா, ம.கிருகஸ்பதி**
(அம்மப்பா, அம்மம்மா)

(9718)


**நாதன்ஸ்**

குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

அஜித், தேவயானி நடித்த

**காதல்கோட்டை**

கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

**நிறைஞ்சனாஸ் சினிமா**

சங்கானை

சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த

**5 அடி 2 அங்குலம்**

கா.நேரம்: 11.00, 2.45, 6.00 [பு.நே]

**மனோகரா**

யாழ்ப்பாணம்

ஷங்கரின் இயக்கத்தில்

சியான் விக்ரம், சதா, விவேக் ஆகியோரின் சிறப்பு நடிப்பில்

**அந்நியன்**

கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30






இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.